விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 08 சனிக்கிழமை (22.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# மாகாண அதிகாரத்தை குறைத்தால் அரசியலில் இருந்து விலகுவேன்!




## அமைச்சர் வாசுதேவ அறிவிப்பு

**மாகாண சபை அதிகாரம் குறைக்கப்பட்டே, வட மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுத்தால், தான் அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்காரவின் அரசியல் வாழ்க்கை முடிவுக்கு கொண்டு வரப்போவதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்திருந்தமை தொடர்பில், கருத்து (20ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் இன்று தேர்



(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நயினை நாகபூசணி அம்மனின் இரதோற்சவம் இன்றாகும்.

இன்று காலை 7.15 மணியளவில் வசந்த மண்டபப்பூஜை இடம்பெற்று 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பார். (செ)

## பன்றிக்கு வெடி; குடும்பஸ்தர் பலி

முல்லைத்தீவில் இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றைய ஒருவர் படுகாயத்திற்கு இலக்காகியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இவ் வெடிவிபத்துச் சம்பவம் புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த நாகராஜா(வயது 32) என்ற குடும்பஸ்தரே மேற்படி விபத்தில் உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, பன்றி பிடிப்பதற்காக பிரஸ்தாப குடும்பஸ்தரும் அவரது சகோதரர் மற்றொருவருமாக எறி வெடி பொருட் (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைப்பு த.தே.ம.முன்னணி ஜேர்மனி பயணம்

(குருமன்காடு)

தமிழ் மக்களின் அரசியல் நிலைவரம் மற்றும் தமிழ் கட்சிகளின் செயற்பாடு தொடர்பாக வேக்கப் வுண்டேசன் அமைப்பினால் மேற்கொள்ளப்படவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் (19ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு நேற்று நியமிக்கப்பட்டது

(கொழும்பு)

அரசியலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நாடாளுமனற தெரிவுக்குழு நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

19 அங்கத்தவர்களை கொண்ட இந்த தெரிவுக்குழுவுக்கு அமைச்சரும் சபை முதல்வருமான நிமல் சிறிபால டி சில்வா தலைவராவார்.

இந்தக்குழுவில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மைதிரிபால சிறிசேன, அநுரபிரியதர்சன யாப்பா, தினேஷ் குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேமஜயந்த, ஏ.எல்.எம்.அத்தாவுல்லா, ரிஷாட் பதியுதீன், சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, பஷில் ராஜபக்ஷ, லக்ஷ்மன் செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார, சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர, பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் மற்றும் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுதர்ஷினி பெர்னா(19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ராஜித யாழ். விஜயம்

(கொழும்பு)

நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் அபிவிருத்தி அமைச்சர ராஜித சேனாரட்ண எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை யாழிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சரின் யாழ். விஜயத்தின போது, யாழ். பாசையூர் இறங்குதுறை மற்றும் சுழிபுரம் இறங்குதுறை என்பவற்றினை திறந்து வைக்கவுள்ளார்.

இதில் பாசையூர் இறங்குறை ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் சுமார் 60 மில்லியன் ரூபாவில் புனரமைப்பு செய்யப் (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் முயற்சியை முறியடிக்க வேண்டும்

### ஒரே தீர்வு தமிழீழமே -பா.ம.க

(கொழும்பு)

இலங்கையில் 13-வது திருத்தசட்டம் ரத்து செய்யப்பட்டால் அது இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அவமரியாதையாக அமையும். எனவே, இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்துவதுடன் இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழீழம்தான் நிரந்தரத் தீர்வு என்பதால் அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பா.ம.க. தலைமை செயற்குழு வலியுறுத்தியுள்ளது.

பா.ம. (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனைத் தமிழர்கள் சூரிய கடவுளாக போற்றினர்!





### - அநுரகுமார எம்.பி

தமிழ் மக்கள் பிரபாகரனை சூரியக்கடவுளாகவே அடையாளப்படுத்தி புகழ்ந்து போற்றினார்கள் என ஜனநாயக தேசியக் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையிடம் வலியுறுத்த பொதுநலவாயம் நல்வாய்ப்பு

### பிரித்தானியா தெரிவிப்பு

(கொழும்பு)

பிரச்சினைகள் காணப்படும் விடயங்களில் தீர்க்கமான முன்னேற்றத்தை காண்பதற்கு இலங்கையிடம் வற்புறுத்துவதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்குமென பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

"உயர்ஸ்தானிகரை கேளுங்கள்" என்ற நிகழ்வின்போது பிரித்தானிய அரசாங்கம் ஏன்? இந்த மாநாட்டை பகிஷ்கரிக்கவில்லை எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்தை வெளியேற்றும் முற்றுகைப் போருக்கு வைகோ அழைப்பு

(ஊட்டி)

இலங்கை இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 25-ம் திகதி ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் குன்னூரில் உள்ள வெலிங்டன் இராணுவ பயிற்சி கல்லூரி முற்றுகையிடும் [illegible]

இது தொடர்பாக வைகோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் இனத்தையே இலங்கைத் தீவில் பூண்டோடு அழிக்க திட்டமிட்டு சிங்களப் பேரினவாத அரசு நடத்திய கோரமான இனப்படுகொலைக்கு அனைத்து விதத்திலும் உடந்தையாக இருந்து செயல்பட்ட காங்கிரஸ் தலைமை தாங்கும் மத்திய அரசு, தாய்த் தமிழகத்துத் தமிழ் மக்கள் நெஞ்சில் ஓங்கி மிதிப்பதுபோல், இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டில் திரும்பத் திரும்ப அழைத்துக்கொண்டு வந்து பயிற்சி கொடுக்கிறது.

தமிழர்களின் தன்மானத்தை வேண்டு (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இயற்கை வளங்கள் இன்றியமையாததொன்று. எனவே இயற்கை வளங்களை பயன்படுத்துகின்ற போது நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சுற்றுச்சூழல் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பயன்படுத்துதல் அவசியம் எனவும் யுத்தகாலத்தில் பெருமளவு இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டும் அழிந்து போயும் உள்ளன. முக்கியமாக வன்னியின் வனவளம் அழிந்துள்ளது. இது எமக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.


வட மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தி நடவடிக்கைகள் இயற்கை வளங்களிலேயே தங்கியுள்ளன. ஆகவே அந்த இயற்கை வளங்களை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகின்ற போது சுற்றுச்சூழல் நலன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நான்கு திட்டமிடப்பட்ட உரிய வழிமுறைகளை சரியாக நடைமுறைப்படுத்தி இயற்கை வளங்களை பெறுகின்ற போதே அந்த வளங்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும்.

சட்டவிரோதமாக இடம்பெற்று வருகின்ற மணல், கிரவல் அகழ்வு மற்றும் மரங்கள் வெட்டுதல் போன்றன எமது பிரதேசத்தின் இயற்கை நலன்களுக்கு பெரும் சவாலாக அமைந்து வருகிறது.

இந்த நடவடிக்கை களால் பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே இந்த நடவடிக் கைகள் தடுத்து நிறுத்தப்பட்டு எங்களுடைய சுற்றுச்சூழல் பாதுகாப்பை பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



நெடுங்கேணி சந்தியில் நேற்று மாலை 5.30 மணியளவில் வேக கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி விளம்பரப் பலகையுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. சாரதி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான முச்சக்கர வண்டியை படத்தில் காணலாம்.

(படம்:- எஸ். செல்வகுமார்)


ராஜா திரையரங்கில்
போயா தின சிறப்புத் திரைப்படம்
முற்றுமுழுதான யாழ்ப்பாண திரைப்படம்
23.06.2013 ஞாயிறு
காட்சிகள் 10.30 2.30 6.30





செல்லா சினிமா யாழ்ப்பாணம்





சிவா, பிரகாஸ்ராஜ் மற்றும் பலர் நடித்த
காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30
இலங்கை இந்திய ஒரே தின வெளியீடு


# மரக்கறிக்குள் மறைத்து முதிரைத் தீராந்திகள் கடத்தல்

## ஹன்டர் வாகன சாரதி கைது

(கிளிநொச்சி)

ஹன்டர் வாகனத்தில் முதிரைத் திராந்திகளைக் கடத்திய நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைது சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் பளை பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

புளியங்குளத்திலிருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த ஹன்டரினுள் முதிரை மரத் தீராந்திகள்; பலாப்பழங்கள் மற்றும் மரக்கறிகளினால் ஒளித்து வைக்கப்பட்டு கடத்த முயற்சிக்கப்பட்ட போதே வீதிப் போக்குவரத்து பரிசோதனைகளில் ஈடுபட்ட பொலிஸார் மேற்படி கடத்தலை இனங்கண்டுள்ளனர்.

உடனடியாக கைது செய்யப்பட்ட ஹன்டர் வாகனச் சாரதி நேற்றைய தினமே கிளி. மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளி.மாவட்ட நீதிபதி வகாப்தீன் வழக்கை அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேலும் கைது செய்யப்பட்ட சாரதியை ஒருலட்ச ரூபாய் சரீரப்பிணையும் செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (செ)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வண். வடமேற்கு வள்ளுவன் சனசமூக நிலையத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா,

முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

# தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை சிறி இராஜ இராஜேஸ்வரி என அழைக்கப்படும் கண்ணகி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தின் 14-ம் நாளான இரதோற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து 7.30 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தல் இடம்பெறும். (செ-4)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீசொர்ண சித்தி விநாயகர் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று சனிக்கிழமை காலை8.45 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் நடைபெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். மேலை வண்ணைநகர் ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 8 மணிக்கு வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தேர் உற்சவமும் நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (செ-5)

# போயா தின ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

அத்துடன் நண்பகல் வேதபாராயணம், காயத்திரி மந்திரம், பஜனை, விசேட சொற்பொழிவு ஆசிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (அ)

# அல்வாய் கொள்ளைச் சம்பவம்; முக்கிய சந்தேக நபர் கைது

(கரவெட்டி)

அல்வாய் இலகடிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் இரண்டு வயது குழந்தையை பணயம் வைத்து 22 பவுண் நகை, 60 ஆயிரம் ரூபாய் பணம், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான புதிய கையடக்கத் தொலைபேசி இரண்டு ஆகியவற்றைக் கொள்ளையடித்த குழுவின் முக்கிய சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபரை நேற்று முன்தினம் தேவரையாளி பகுதியில் வைத்து கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது 5 பவுண் நகை மீட்கப்பட்டதாகவும் அத்துடன் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான கிளை சங்கமொன்றை உடைத்து களவாடப்பட்ட பொருட்கள் சிலவும் அவரிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த மேற்படிச் சந்தேக நபரை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் சந்தேக நபரை எதிர்வரும் 5-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் ஏனைய குற்றவாளிகளையும் கைது செய்து மன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (செ-24)

# மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு

2013 ஆகஸ்டில் உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள மாதிரி வினாத்தாள்களுக்கான உதவிக் கருத்தரங்கு யாழ். வலயப் பாடசாலைகளுக்கு ஐந்து மத்திய நிலையங்களில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளன.

நேர அட்டவணையும் நடைபெறவுள்ள மத்திய நிலையங்களும் தொடர்பான தகவல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தத்தமக்குரிய நிலையங்களில் இக்கருத்தரங்கிற்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார். (அ-2)

# மன்மோகனுக்கு மஹிந்த கடிதம்

ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷ, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தானும் இலங்கை மக்களும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதுடன், காயமடைந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நலன்வேண்டி பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி தனது அனுதாபக் கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

# தெய்வத்தாயாரின் 50-ம் ஆண்டு நிறைவு தினம்

## திருமதி சடையர் வல்லிபுரம் பங்கயவல்லி [செல்லப்பாச்சி]



தெய்வத்தாயார் திருமதி சடையர் வல்லிபுரம் பங்கயவல்லி [செல்லப்பாச்சி] அவர்களின் கதிர்காம சேஷ்த்திரத்தில் மறைந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியடைந்ததையிட்டு, 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குருபூசையிலும், அன்னதான நிகழ்விலும், பங்குபற்றி சிறப்பிக்கும்படி, உற்றார், உறவினர், நண்பர்கள், சமூக சேவைகள் ஆர்வலர்கள் ஆகிய அனைவரையும் வேண்டுகின்றோம்.

அன்றைய தினம் அவரின் நினைவாக அறக்கொடை நிதியம் ஆரம்பிக்கப்பட உள்ளதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் :- சடையம்மா மணிமண்டபம், அருள் மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயம்.

(3099)

கலாநிதி. லயன். வல்லிபுரம் பரமசிவம் (J.P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆசைக்கும் எல்லை உண்டு

வழிப்போக்கன் ஒருவன் வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் வேகமாக நடந்ததற்குக் காரணம் அது வெயில் காலம்... காலில் செருப்பில்லை... மணல் பாதை... அது தான் அவன் வேகமாக நடக்கக் காரணம்.

அந்தச் சமயத்தில் ஒருவன் குதிரை மீதேறி அவ்வழியாக வந்து கொண்டிருந்தவன் குதிரையில் இருந்தவனை பார்த்து, ''ஐயா! நீங்களோ குதிரை மீது உட்கார்ந்து கொண்டு போகிறீர்கள். அப்படியிருக்கும் போது உங்களுக்கு அந்தச் செருப்பு எதற்கு? அதை எனக்கு கொடுத்து உதவலாமே!'' என்று கேட்டான்.

குதிரை மீதிருந்தவன் யோசித்தான். ''இவன் சொல்வதும் நியாயம் தானே...'' என்று நினைத்த அவன், தன்னுடைய செருப்பைக் கழற்றி அந்த வழிப்போக்கனிடம் கொடுத்தான்.

''மிகவும் நல்லது'' என்று சொல்லி வழிப்போக்கனும் செருப்பை வாங்கி தன் காலில் மாட்டிக் கொண்டான்.

அதன் பின் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

''ஐயா நீங்கள் குதிரையில் போவதால், போக வேண்டிய இடத்திற்கு விரைவில் போய் சேர்ந்து விடுவீர்கள். அதனால் உங்கள் கையில் அந்தக் குடை எதற்கு? நான் நடந்து போய்க் கொண்டிருப்பவன். நான் அந்த வெயிலில் நீண்ட நேரம் நடக்க வேண்டியிருக்கும்! அந்தக் குடையும் எனக்கு கொடுங்களேன்'' என்று வினவினான்.

குதிரை வீரன் யோசித்தான். இதுவும் நியாயம்தான் என்று அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன் இரக்கப்பட்டு தன்னிடமிருந்த குடையையும் வழிப்போக்கனிடம் கொடுத்து விட்டான்.

அதன்பின் குதிரைவீரன் நிம்மதியாகப் புறப்பட்டான். இப்போது வழிப்போக்கன் மறுபடியும் கைதட்டி குதிரை வீரனை நிறுத்தினான்.

''என்னப்பா... ஏன் என்னை நிறுத்தினாய்? இன்னும் உனக்கு ஏதாவது வேண்டுமா?'' என்று குதிரையில் இருந்தவன் வினவினான்.

இவன் மெதுவாக வாயைத் திறந்து 'அந்தக் குதிரையையும் எனக்குக் கொடுங்களேன்' என்றான்.

அந்தக் குதிரை வீரன் இப்போது ஒருகணம் யோசித்து பார்த்தான்.

உடனே தன்னிடமிருந்து குதிரைச் சவுக்கால் அவனை வாங்கு வாங்கென்று பின்னியெடுத்தான். அவ்வளவு சவுக்கடியும் வாங்கிக் கொண்டு அந்த ஆள் சிரித்தான். குதிரை வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்னப்பா அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு இப்படிச் சிரிக்கிறாய்?'' என்று கேட்டான்.

இப்போது அந்த வழிப்போக்கன் கூறினான்.

''ஐயா... நான் இப்படி சிரிப்பதற்கு காரணம் இருக்கிறது. இப்படிக் குதிரையைக் கேட்டு உங்களிடம் அடி வாங்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள் என் உயிர் உள்ள வரையில் மனதில் ஒரு தவிப்பு இருந்து கொண்டேயிருக்கும். 'செருப்பையும் குடையையும் கேட்டவுடனே கொடுத்தாரே... குதிரையையும் கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரே!'' என்ற பேராசையில் ஏங்கிக் கொண்டே இருப்பேன். இப்போது உங்களிடம் அடி வாங்கிய பின் என்னுடைய அந்த சந்தேகம் தீர்ந்து போய் விட்டது. இப்போது என்னுடைய ஆசைக்கு எல்லை எது என்பது எனக்கு புரிந்து விட்டது'' என்று சொல்லி விட்டு அவன் நடக்கத் தொடங்கினான்.

'ஆசைக்கும் எல்லையுண்டு' என்பதை இந்தக் கதை விளக்குகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தெல்லிப்பழை பிரதேசத்தில் செஞ்சிலுவை சங்கத்தின் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கசம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ். செஞ் சிலுவைச் சங்கத்தின் ஊடாக மீளக் குடியேறிய மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக பல்வேறு சேவைகளை ஆற்றிவருகிறது.

அந்த அடிப்படையில் மீளக் குடியேறிய மக்களுக்கு சுகாதார சேவை, நீர் வழங்கல் சேவை என்பனவற்றை செய்து வருகின்றது. கொல்லங்கலட்டி கிராம அலுவலர் பிரிவில் 3 குழாய் கிணறுகளும், நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் 3 குழாய் கிணறுகளும் தந்தை செல்வா கிராம அலுவலர் பிரிவில் 2 குழாய் கிணறுகளும் அமைந்துள்ளன.

இதற்கு தேவையான கை இயக்க பம்புகளும் வெகு விரைவாக அமைத்து கொடுக்கப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 28 கிணறுகளை திருத்தியமைத்துக் கொடுத்துள்ளனர். இக் கிணறுகள் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, தந்தை செல்வாபுரம், நகுலேஸ்வரம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ளன.

மேலும் மீள்குடியேறிய மக்களின் நலன் கருதி அங்கு வாழுகினற இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, சமூக விழிப்புணர்வு பயிற்சி என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலாக இந்திய உதவித் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை பிரிவில் ஏறக்குறைய ஆயிரத்து 326 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தந்தை செல்வாபுரத்தில் 161 வீடுகளும் இது இந்திய வீட்டுத் திட்டத்தின் முதல் கட்ட செயற்பாடாகும்.

இதன் இரண்டாம் கட்டப் பணிகள் மாவிட்டபுரம் கிராம அலு வலர் பிரிவில் 79 வீடுகளும் மாவிட்டபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 119, கொல்லங் கலட்டி கிராம அலுவலர் பிரிவில் 281, தெல்லிப்பழை கிராம அலுவலர் பிரிவில் 141, வித்தகபுரம் கிராம அலுவலர் பிரிவில் 186, நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் 171, இளவாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 92, குரும்பசிட்டி கிராம அலுவலர் பிரிவில் 85 வீடுகளும் மொத்தமாக தெல்லிப்பழை பிரதேச பிரிவில் ஆயிரத்து 326 வீடுகள் முதற்கட்டமாக நிர்மாணிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டு நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றுள் ஆயிரத்து 5 வீடுகள் 30% வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டும் 270 வீடுகள் 60% வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டும் 7 வீடுகள் முற்றாக பூர்த்தியாக்கப்பட்டும் உள்ளன.

மாவிட்டபுரம் கிராம அலுவலர் பிரிவிலும் நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவிலும் தலா ஒரு வீடு கடந்த மூன்றாம் திகதி அன்று உத்தியோக பூர்வமாக வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டதாக வலி வடக்குப் பிரிவின் யாழ். கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர் சி. நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-2)

# மாகாண தமிழ்மொழி தினவிழா 28ஆம் திகதி

அகில இலங்கைத் தமிழ் தினப் போட்டியின் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் இவ்வாண்டுக்கான மாகாண தமிழ்மொழித்தின விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியின் உள்ளக கலையரங்கில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இந்நிகழ்வின் போது பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20-30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 100-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 150 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 140 | 160-200 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 160-230 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 120 | 80 | 60 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 140 | 140 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 300 |
| போஞ்சி | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 90 | 120 | 100 |

# இராசி பலன்

22.06.2013
(ஆனி 08, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 8.05 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.16 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
சுபநேரம் 2.54-4.24 மணிவரை

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு தடவை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** உற்சாகமாக பணி புரியும் நாள், அடுத்தவர் நலனில் அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், சுவாரஸ்யமான நாள், வீட்டுப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கன்னி** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும் நாள், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

**துலாம்** வாய்ப்புக்கள் தேடி வரலாம், தொலைபேசி தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, உறவினர் பகை அகலும், வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தேக நலன் சீராகும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், மனக்குழப்பங்கள் தீரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத்தின் பேரில் கைதானவருக்கு விடுதலை

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில் 2007 ஆம் ஆண்டு பாடசாலை கல்வி உபகரணங்களை களவாடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை குற்றவாளி இல்லை என பருத்தித்துறை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.


கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில் 2007 ஆம் ஆண்டு பாடசாலையில் வைக்கப்பட்ட அரச சொத்தான இரு கல்வி உபகரணங்களை களவாடியதாக அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸார் வழக்கு பதிவு செய்திருந்தனர்.

மேற்படி வழக்கின் இறுதி தீர்ப்பை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரம் வழங்கினார்.

இவ்வழக்கின் சாட்சியாளராக முன்னாள் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரும் தற்போதைய வடமாகாண கல்விப் பணிப்பாளருமான வை. செல்வராசா சாட்சியமளித்தார்.

இதன்போது போதிய சாட்சிகள் உறுதிப்படுத்தப்படாமையினால் நீதவான் குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுதலை செய்தார்.

அத்துடன் அவரிடமிருந்து மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களை மீண்டும் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-24)




நன்றி:- அததெரண

# சமூகப் பாதுகாப்பு சபையில் 260 பேர் புதிதாக இணைவு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை சமூக பாதுகாப்பு சபையின்கீழ் ஓய்வூதியத்திற்காக இந்த வருடத்தில் இதுவரை 260 பேர் யாழ். மாவட்டத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இதுவரை 36 ஆயிரத்து 800 பேர் ஓய்வூதியத்திற்காக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 470 பேரும் சாவகச்சேரியில் 2 ஆயிரத்து 540 பேரும் பருத்தித்துறையில் 4 ஆயிரத்து 132 பேரும் நல்லூரில் 2 ஆயிரத்து 713 பேரும் கோப்பாயில் 4ஆயிரத்து 218 பேரும் உடுவிலில் 2 ஆயிரத்து 890 பேரும் கரவெட்டியில் 4 ஆயிரத்து 640 பேரும் தெல்லிப்பழையில் ஆயிரத்து 804 பேரும் சண்டிலிப்பாயில் 6 ஆயிரத்து 305 பேரும் நெடுந்தீவில் 215 பேரும் வேலணையில் 505பேரும் சங்கானையில் 3 ஆயிரத்து 334 பேரும் ஊர்காவற்றுறையில் 779 பேரும் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 152 பேரும் காரைநகரில் 522 பேரும் பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ். மாவட்ட செயலகம் ஊடாக நேரடியாக 581 பேர் பதிவு செய்துள்ளனர்.

இதில் கடந்த 2012 ஆம் ஆண்டு 506 பேர் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள தகுதி பெற்றுள்ளதோடு கடந்த வருடம் 140 பேர் ஓய்வூதியம் எடுக்கத் தகுதி பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சுதேச வைத்தியருக்கு பதக்கம் வழங்கி கௌரவிப்பு

வடக்கின் வைத்திய வர்ணம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆயுர்வேத வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்டு 25 வருடங்களைப் பூர்த்தி செய்த ஆயுர்வேத வைத்தியர்களை பாராட்டும் முகமாக சான்றிதழும் பதக்கமும் வழங்கும் நிகழ்வு அண்மையில் நீர்வேலி பொன்மகால் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது சங்கானையைச் சேர்ந்த சிதம்பரம் அரியரத்தினம் என்ற ஆயுர்வேத வைத்தியருக்கும் சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திஸ்ஸநாயக்கவினால் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டது. (அ-6)




# பாலியல் தொந்தரவு செய்த முதியவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நான்கு வயது பெண் குழந்தைக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த 68 வயதுடைய முதியவருக்கு விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கொக்குவில் நீராவியடிப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் 4 வயது குழந்தையொருவரை அதேயிடத்தை சேர்ந்த முதியவர் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

குறித்த பெண் குழந்தை அவ்விடத்திலுள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றிருந்தது.

இதன்போது, குறித்த தனியார் கல்வி நிலையத்தில் எவ்வித வகுப்புக்களும் இடம் பெறாத காரணத்தினால் தனிமையை பயன்படுத்தி பிரஸ்தாப பெண் குழந்தையை வீட்டின் உரிமையாளரான வயோதிபர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெளித் தெரியாத போதிலும் நல்லெண்ணம் கொண்ட சிலரினால் யாழ். சிறுவர் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளனர்.

பின்னர் சிறுவர் நன்னடத்தை பிரிவினூடாக குறித்த வயோதிபரை கைது செய்து பொலிஸார் சிறுவர் நீதிமன்றில் ஆஜர் படுத்தியுள்ளனர்.

வழக்கை விசாரணை செய்த சிறுவர் நீதிமன்ற நீதவான் பிரஸ்தாப வயோதிபரை எதிர் வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குறித்த சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கிய 68 வயது வயோதிபருக்கு இரு பிள்ளைகள் பிரான்சில் இருப்பதாகவும் அவர்கள் இருவருக்கும் பிள்ளைகள் இருப்பதாகவும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (அ-4)

# வாகன புத்தக விவகாரம்; இருவருக்கு அபராதம்

புதிய ரக வாகனத்தை விற்பனை செய்து அதன் புத்தகத்தை பெயர் மாற்றம் செய்யாத இரு நபர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று 16 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பருத்தித்துறை பகுதியை சேர்ந்த நபர் புதியரக வாகனத்தை மானிப்பாய் நபருக்கு விற்பனை செய்துள்ளார். பின் 14 நாட்கள் கடந்தும் வாகனப்புத்தகத்தை பெயர் மாற்றம் செய்யாமல் வாகனம் செலுத்தியமையால் குறித்த வாகனத்தைப் பரிசோதித்த நெல்லியடிப் பொலிஸார் வாகன உரிமையாளருக்கு எதிராக வழக்கு பதிவு செய்ததுடன் வாகனத்தை விற்ற முன்னாள் வாகன உரிமையாளருக்கு எதிராகவும் வழக்கை பதிவு செய்தனர்.

மேற்படி வழக்கின் நபர்களை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரம் முன்னிலையில் பொலிஸார் நேற்று ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் வாகனத்தை விற்பனை செய்த நபருக்கு 10 ஆயிரம் ரூபாவும் அதனை வாங்கியவருக்கு 6 ஆயிரம் ரூபாவையும் அபராதமாக செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார். (அ-24)

# இலஞ்சம் பெற்ற பொலிஸார் யார்? விசாரணைகள் தொடர்கின்றன

(யாழ்ப்பாணம்)


யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரிடம் இலஞ்சம் வாங்கினார் என பொலிஸார் ஒருவருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரில் மத்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள வர்த்தக நிலையமொன்றிடமிருந்து இலஞ்சம் பெற்றார் என்ற குற்றஞ்சாட்டப்பட்டே பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றியிடம் கேட்டபோது,

குறித்த சம்பவம் நடைபெற்றது உண்மை. எனினும் பொலிஸார் என்பது போலிப் பொலிஸாராக இருக்கலாம் என்ற நிலையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதேவேளை இலஞ்சம் பெற்றார் என சந்தேகிக்கப்படும் பொலிஸ் ஒருவரின் இலக்கத்தகடு அத்தியட்சகரிடம் வழங்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. (அ-4)



யாழ்ப்பாணம் நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்று இடம்பெற்றபோது... (படம்: எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகங்களில் சிறுவர் நல கொடுப்பனவுகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் சிறுவர் நல கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.அவற்றின் விபரம் வருமாறு;

**வைத்திய செலவிற்கான நிதி உதவி**

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு நோய்கள் ஏற்படுகின்ற போது மருத்துவ செலவிற்கு உதவித்தொகைக்காக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவிற்கு விண்ணப்பிக்க முடியும்.

**இரட்டைப்பிள்ளைகளுக்கான கொடுப்பனவு**

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகள் கிடைக்கின்ற போது இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.இரு குழந்தைகளாயின் 10 ஆயிரம் ரூபாவும் இரட்டைப் பிள்ளைகளுக்கான கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.பிள்ளைகள் கிடைக்கப்பெற்று 3 மாதத்திற்குள் இக்கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

**திடீர் விபத்துக்களுக்கான நிதி உதவி**


வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களினைச் சேர்ந்த 18 வயதிற்கு உட்பட்ட சிறுவருக்கு விபத்து ஏற்படுகின்ற போது உச்ச பெறுமானம் 15 ஆயிரம் ரூபா வரை இந்நிதி உதவியை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும்.ஒரு குடும்பத்திற்கு ஒருமுறை மட்டுமே இந் நிதி உதவி வழங்கப்படும்.

18 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுமிடத்து சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுமிடத்து உடனடி நடவடிக்கைக்காக

பிரதேச செயலாளர், பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் உத்தியோகத்தர்,கிராம அலுவலர்,பொலிஸ் நிலையம்,தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 தொலைபேசிமுறைப்பாட்டு இலக்கம் ஆகியவற்றுடன் முறைப்பாடுகளினைத் தெரிவித்துக் கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார். (அ-2-60)

## அந்தோனியார் திருவிழா இன்று

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி புனித அந்தோனியார் ஆலய திருவிழா இன்று சனிக் கிழமை நடை பெறவுள்ளது. இதில் சிறப்பு நிகழ்வாக இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு அந்தோனியார் நாட்டுக்கூத்து மன்றத்தினரால் ஞானதீபன் எனும் நாட்டுக் கூத்து நடை பெறவுள்ளது. இந் நாட்டுக் கூத்தினை நாட்டுக் கூத்து ஆசிரியர் பா.வேதநாயகம் நெறியாள்கை செய்துள்ளார். (அ-3-64)



## ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

**இன்று தேர்த்திருவிழா**

**வேரோடு வினையறுக்க தேரோட்டினோம் விநாயகனே**

தேரேறி வருகின்ற தேவாதிதேவனே விக்ன விநாயகனே!
வேரோடு வினையறுக்கத் தேரோடும் வீதியிலே
ஊரோர் வடம் பிடிக்க உன்னத காட்சி தரும்
பேரோங்கு கணபதியே பெருமகனே நற்திருமகனே!
பாரோர் புகழ்ந்தேத்த வரும் பானை வயிற்றோனே
பக்தர்களைக் காப்பவனே! பரம கருணா நிதியே!!
சீரோடுஞ் சிறப்போடும் இப்பூமியிலே நாம் வாழ
திருவருள் புரிவாய் நீராவியடி வீரகத்தி விநாயகனே!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

# மாவட்ட இளைஞர் விளையாட்டுப் போட்டி

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட காரியாலயமும் இணைந்து நடத்தும் மாவட்ட இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழயையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட விளையாட்டுக் குழு அறிவித்துள்ளது.

ஒவ்வொருபிரதேச இளைஞர்கழகசம்மேளன ரீதியிலும் இடம்பெற்ற ஒவ்வொரு இளைஞர் விளையாட்டு நிகழ்வுகளிலும் முதலாம், இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட போட்டியாளர்கள் தவறாது பங்குபற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான தகவல்கள் சகல பிரதேச இளைஞர்சேவை அதிகாரிகளுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளதால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்கள் எதிர்வரும் ஜூலை மாதமளவில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் இளைஞர்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கு கொள்ளும் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மாவட்ட விளையாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-3-23)

# இளைஞர் வி.விழாவின் இறுதிநாள் நிகழ்வு

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலயத்துடன் இணைந்து நடத்தும் 2013 ஆம் ஆண்டுக்கான மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.லக்ஷன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால, யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் மோகன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் வடமாகாண பணிப்பாளர் விமலேஸ்வரி ஸ்ரீஸ்கந்தரூபன், மாநகரசபை உறுப்பினர் செ. ரமணன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா ஆகி யோரும் கலந்து கொள்வர். ஒவ்வொரு பிரிவி னதும் இருபாலாருக்குமான 100 மீற்றர் இறுதி நிகழ்வும் அஞ்சல் ஓட்டமும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களது இடை வேளை உடற் பயிற்சிக் கண்காட்சியும் இடம் பெறவுள்ளது. (அ-3-23)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>உயரம்: 5'11"<br>கி.பா : 16.25<br>தகைமை/தொழில்:Civil Engineer பொறியியலாளர்<br>தொ.இ:B504 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா : 36.5<br>உயரம்: 5'3" 2 செவ்<br>தகைமை/தொழில்: BA முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G518 |
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா : 12.75 12ல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc.Eng,MSc. பொறியியலாளர்<br>தொ.இ:B505 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா : 85.75, 8 செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc.MSc குடியேற்ற உத்தியோகத்தர்<br>தொ.இ:G715 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா :8.5<br>உயரம்: 5'4'.<br>தகைமை/தொழில்-HNDA சுவிஸ் Not PR<br>தொ.இ:B507 | பிறப்பு: 1978 இந்து(DO)<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா :36 7 செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ:G770 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4கி.பா :21.50 சூ,செவ் 2ல<br>உயரம்: 5'6'<br>தகைமை/தொழில்- BBM, MBA UK Work Permit<br>தொ.இ:B508 | பிறப்பு: 1984 இந்து(செங்குந்தர்)<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா : 28.5<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:HNDIT,B.Tech<br>தொ.இ:G775 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



## வைத்திய சேவை

- On Call Doctor சேவை
- வீடுகளுக்கு வந்து நோயாளிகளை பார்வையிடும்சேவை Home Visit
- உடற்பருமன் குறைத்தல் /கூட்டுதல் தொடர்பான சிகிச்சைகள்
- முடி யுதிர்தலுக்கான சிகிச்சைகள்
- முகப்பருக்களுக்கான சிகிச்சைகள்

மேலதிக விபரங்களுக்கு : குளோபல் கிளினிக்
இல.769, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773179062
(3080)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் | அன்பளிப்பு பொருட்கள் | உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(சி/3630)



## BARNABAS
இன் மலிவு விற்பனை
Sony Japan Wega TV கள்




15,000/- 8,990/-
21,000/- 11,990/-
மலிவு விலையில்



Japan, AMP Box
Pioneer மலிவு விலையில்
11990/- இலிருந்து
5,900/- 4,100/-
T.P:0776479299
245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
(சி/3723)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசேதன இரசாயனங்களின் ஆதிக்கமும் உயிர்ப்பசளைகளின் தேவையும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 27-II

நம்நாட்டு விவசாயம் திசைமாறி தற்போது அசேதன இரசாயனங்களின் பயன்பாடின்றி விவசாயச் செய்கை இல்லை என்றாகிவிட்டது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு விவசாயப் பெருமக்களின் பயிர்ச்செய்கையில் அன்றாட பயன்பாட்டு பொருளாக விவசாயத்திற்கான முதலீடுகளில் அசேதன நச்சுப் பொருட்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இது பற்றிய கரிசனை பலரிடமும் பல மட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவசியம் எதிர்கொள்ள வேண்டிய விடயமாகவும் அதற்கான தீர்வினை எட்டுவதற்கான வழிமுறைகளையும் நாமே கண்டுபிடிக்க வேண்டும். அசேதன இரசாயனங்களில் பசளைகள், பீடைநாசினிகள் மற்றும் பூப்பதைத் தூண்டும் ஓமோன்கள், தாவர வளர்ச்சி ஊக்கிகள், கனிய வைத்தல் என பல வகைப்பட்டன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினது பக்கவிளைவுகள் பற்றி ஆய்வறிக்கைகள் தெரிவித்தாலும் அவற்றினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி இன்னும் ஐயப்பாடுகள் இருக்கவே செய்கின்றன. இது ஒருபக்கமிருக்க பயன்படுத்தப்படும் நச்சு இரசாயனங்களினால் ஏற்படும் தாக்கங்கள் மனிதனிலும் சூழலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதாலும் அவற்றிலிருந்து மீள வேண்டிய அவசியத்தை உணர்ந்ததாலும் அசேதன இரசாயனங்களுக்குப் பதிலாக மாற்றுமுறைகளை பரிந் துரைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாமனைவரும் உள்ளோம். விவசாயப் பெருமக்களும் இந்த விளைவுகளைப்பற்றி அறிந்து சிந்தித்து பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களின் அளவை கணிசமான அளவிற்கு குறைக்க ஒத்துழைக்க வேண்டும். பரிந்துரைப்பவர்களுக்கும் பயன்படுத்துபவருக்குமான புரிந்துணர்வு இங்கே எய்தப்படல் வேண்டும் என்பதோடு மாற்று வழிகளுக்கான நஞ்சற்ற முறைகளை விவசாய பெருமக்கள் இலகுவாக பெறுவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.

மாற்று வழிகளில் பலவற்றை பரிந்துரைக்கலாம். உயிர்ப்பசளைகள், உயிர்க்கொல்லிகள் (பூச்சி மற்றும் பூஞ்சண கொல்லிகள், களை கொல்லிகள்) மற்றும் இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் நுண்ணங்கிகள் என பலவகைகளுண்டு. இவற்றைப் பற்றி ஆய்வுகளும் நிறையவே செய்யப்பட்டிருந்தாலும் எமது பிரதேசத்திற்கு உகந்ததான அங்கிகளை இனங்கண்டு அவற்றை இனம்பெருக்கி விவசாய பெருமக்கள் இலகுவாகவும் மலிவாகவும் பெற ஆவன செய்ய செய்தல் வேண்டும். இன்னும் இவ்வகையான நுண்ணங்கிகள், அங்கிகள் பற்றிய ஆய்வுகள் முடுக்கிவிடப்படல் வேண்டும். இவற்றை பயன்படுத்தும் போது அசேதன பசளைகளின் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றம், பயிர் விளைச்சலில் ஏற்படுத்தும் மாற்றம், குறிப்பாக சூழலில் ஏற்படுத்தும் மாற்றம் என்பன கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். இவற்றுக்காக இத்துறைசார்ந்த மாணவர்களை பயிற்றுவிக்கவும் வேண்டும். இவ்வாறானவற்றை பயன்படுத்தும் போது அவற்றினது தரம் நிர்ணயஞ் செய்யப்பட வேண்டியதுடன் அதனை தொடர்ந்தும் கண்காணிப்பதற்கு உரிய வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அசேதன இரசாயன பசளைகளைப் போல உயிர்ப்பசளைகள் விரைந்து தொழிற்படமாட்டாதவை, அதனால் பயிர்களில் உயிர்ப்பசளைகளின் தாக்கம் உடனடியாகத் தெரிவதில்லை. இது விவசாயப் பெருமக்களிடையே உயிர்ப்பசளைகளை பயன்படுத்துவதில் தற்காலிக பின்னடைவை தோற்றுவிக்கும். ஆனால், அசேதன இரசாயன பசளைகளைப் போலன்றி உயிர் பசளைகளும் நுண்ணங்கிகளும் நின்று பெருகி மண்ணுக்கு வளஞ்சேர்ப்பனவாகும். காலப் போக்கில் உயிர்ப்பசளைகளது தாக்கம் மண்ணிலும் உணரப்படும்.

உயிர்ப்பசளைகளை பயன்படுத்துவது விளைநிலத்திற்கும் பயிருக்கும் நல்லது. அத்துடன் அதனால் சூழல் வளப்படும். இயற்கையுடனான விவசாயத்திற்கான திறவுகோலாக அது அமையும். எமது சூழல் தொகுதி தனித்துவமானது. அத்துடன் அந்நிய தேசத்திலிருந்து நுண்ணங்கிகளை வரவழைக்காமல் எமது பகுதியில் உள்ள வளமான அங்கிக்ளைப் பிரித்தெடுத்து அவற்றை இனங்கண்டு அவற்றினது பீடை கட்டுப்படுத்தும் ஆற்றல் அல்லது தாவரத்திற்கேற்ற பசளைப் பெறுமானத்தை ஈடுகட்டும் வழி வகைகளை அறிதல் வேண்டும். உயிர்ப் பசளைகள் தாவரத்திற்கு எதுவித தீங்கையும் ஏற்படுத்தாது. மேலும் இவ்வாறான அங்கிகள் இங்குள்ள சூழலில் அதிகமாக பெறக்கூடியதாக இருப்பதனால் இங்கும் அவை பல்வேறு தாக்கத்திற்கு உட்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்துடன் உயிர்ப் பசளைகளை கழிவுப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்தால் சாலையோரம் தேங்கிக் கிடக்கும் குப்பைகளுக்கு கழிவகற்றல் திட்டத்தின் மூலம் விமோசனமும் கிடைக்கும். வீட்டில் சேரும் தாவரக் கழிவுகளை சொப்பிங் பையில் சேர்த்து வைத்திருக்கின்றமையும் வசதிவரும் போது இலாவகமாக எடுத்துச் சென்று ஸ்ரைலாக பாதையில் வீசிவிட்டு செல்வதையும் அவதானிக்க வேண்டும். தெருவில் வாழும் நாய்களுக்கு இவை நொறுக்குத்தீனியாக பாதை முழுவதும் இவ்வாறான கழிவுகள் பரந்துபட்டு இருப்பதையும் பாதையில் பயணிப்போருக்க அசௌகரியத்தை ஏற்படுத்துவதையும் காணலாம். குறிப்பாக எமது பாடசாலைப் பிள்ளைகள் மிகவும் சிரமப்பட்டு இவ்வாறான கழிவுகளுக்கூடாக அருவருத்து நடந்து செல்வதையும் காணலாம்.

இன்றைய காலகட்டத்தில் உயிர்ப் பசளைகளை உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகூட வசதி பாரியளவில் தேவைப்படுகின்றது. இவ்வாறான உயிர்ப்பசளைகளை உற்பத்தி செய்வதில் தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்வர வேண்டியது அவசியமாகும். ஆய்வுகள் பல இன்னும் இவ்வாறான உயிர்ப்பசளை உற்பத்தி செய்வதிலும் அவற்றினது பயன்பாடு, பாதிப்பு இன்னும் அவற்றினால் சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் அனைத்துமே கண்காணிக்கப்படுவதுடன் மேலும் அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தும் வழிகளையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும். அனைத்திற்கும் மேலாக விவசாயப் பெருமக்களை இவ்உயிர்ப் பசளைகளை பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும். விவசாயப் பெருமக்களிடையே மனமாற்றத்தை கொண்டு வருவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் பலவழிகளிலும் நாம் முயற்சி செய்ய வேண்டும். விவசாய பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விவசாயிகளுக்கான நல்ல செய்தியை எடுத்துச் செல்வதில் பெரும் பங்குண்டு. விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புக்களையும் அவரவர் விளைநிலத்தில் செய்து விவசாயப் பெருமக்களை அசேதன இரசாயனப் பாவனையிலிருந்து விடுவித்து சேதன விவசாயத்தை செய்ய ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். இது விடயத்தில் விவசாய பீடத்திற்கு பாரிய கடமைப்பாடு உண்டு என்பதனை விவசாயபீடம் நன்குணர்ந்திருக்க வேண்டும். விவசாய திணைக்களம், விவசாயபீடம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து இந்த முயற்சிக்கு வழி சமைக்கலாம். இது விடயமாக யாழ்ப்பாணத்திலுள்ள முகாமையாளர் மன்றத்தில் உயிர்ப்பசளைகள் பற்றி பேராதனை பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் குலசூரிய பங்குபற்றும் கலந்துரையாடல் இன்று மாலை 5 மணிக்கு பருத்தித்துறை வீதியிலுள்ள சங்கிலியன் சிலைக்கு அண்மையிலுள்ள யூரோவில் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. அறிவு சார்ந்த இக் கலந்துரையாடலில் விருப்பமுடையோர் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05.04.1941
மறைவு: 22.06.2010

## நல்லம்மா சுப்பிரமணியம்




அன்பின் உருவாகி
எமக்கு இன்ப வழிகாட்டி
அறிவு ஆற்றலில்
எமை நல் மனிதராக்கி
துன்பம் வரும் வேளையிலே
நாம் துவண்டிடாது தூக்கி நிறுத்தி
வாழ்வைப் புரியவைத்த - எம்
அன்பின் அன்னையே
ஆண்டுகள் ஓடி மறையும்
உம் நினைவுகள் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்

**உம் பிரிவால் துயருறும் :**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய
# வருடாந்த தேர்த்திருவிழா சிறப்பு மலர்- 22.06.2013

## தலைவரின் ஆசிச் செய்தி



உடற்பலத்துக்கும் ஞானச் செழுமைக்கும் அடையாளமான கடவுள் விநாயகப் பெருமான். குறை தீர்த்து வினை தீர்க்கும் கற்பக விநாயகர் உரும்பிராயில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயத்தின் முன்புறத்தில் அனைவரையும் ஈர்த்துக் கொண்டிருக்கும் இருமகா பெரிய யானைகளின் தோற்றம் பார்ப்பவர்கள் கண்களைக் கவர்வன. இவ்வாலயத்தில் காணப்படும் சிற்பங்கள் எழிற் பொக்கிஷமாகத் திகழ்கின்றன. வானுயர்ந்த கோபுரம் அழகுமிகு இரதங் களும் இவ்வாலயத்தின் தனிச் சிறப்பு.


மஹோற்சவத்தின் சிகரமாகத் திகழும் இரதோற்சவத்தில் கற்பக விநாயகர் அடியவர்களின் தொல்லை வினை அகற்ற தேரில் ஆரோகணித்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும். தேரில் எழுந்தருளி வருகின்ற கற்பக விநாயகனை உள்ளன்புடன் வழிபட்டு அற்புத கீர்த்தியும் ஆனந்த வாழ்வும் நற்பொருட்களும் நலமான வாழ்வும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

சைவப்புலவர் சி.நந்தகுமார் (பரிபாலன சபைத் தலைவர், உரும்பிராய் ஓடையம்பதி கற்பக- விநாயகர் ஆலயம்)



**அழகுமிளிர் அருள்மிகு ஓடையம்பதி**
**கற்பக விநாயகர் ஆலயம்**

## பிரதம குருவின் ஆசிச்செய்தி



விநாயகர் திருவருள் அனைவருக்கும் கிட்டட்டும்

உரும்பிராய் ஓடையம்பதி புண்ணிய ஷேத்திரத்தில் குடிகொண்டு இலங்கும் விநாயகப் பெருமான் பக்தர்களுக்கு அருள் மழை பொழிவதற்காக இன்று திருத்தேரில் எழுந்தருளுகிறார்.

தெய்வ வழிபாட்டில் முதல் வணக்கத்துக்குரிய கீர்த்தி மிக்கவர் கஜமுகன். இறைஞ்சி வேண்டும் அடியார்களுக்கெல்லாம் நிறைந்த அருள் சுரக்கும் தும்பிக்கை நாயகன். இத்தகைய பெருமைகள் மிக்க பிள்ளையாரின் அனுக்கிரகம் பெற வேண்டி மெய்யடியார்கள் அனைவரும் சமயனுஷ்டானங்களுடன் ஆலயத்துக்கு வந்து புண்ணியங்கள் பெருக்கித் தாங்கள் இவ் வுலக வாழ்வைச் செழுமைப்படுத்தவும் அடியவர்களுக்கு திருத்தேரில் எழுந்தருளும் கண்கண்ட தெய்வமாம் கற்பக விநாயகப் பெருமானின் திருவருள் சித்திக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ
கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்.

ஈழத்திருநாட்டின் மகுடமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சீரும் சிறப்பும் தன்னகத்தே கொண்டுள்ள வலிகாமம் கிழக்குப் பகுதியில் சைவமும் தமிழும் நிறைந்த உரும்பிராய் ஓடையம்பதி என்னும் திவ்விய சேத்திரத்தில் எழுந்தருளி துதிப்போரின் துன்பம் போக்கி காத்து அருள் மழை பொழியும் ஓடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் வரலாறு காலத்தால் அழியாதது. அந்நியர் ஆட்சியில் ஆலயங்கள் அமைக்க, பிரதிஷ்டை செய்ய சைவவழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்ட போது மக்களின் மனதில் நிலைபெற்றிருந்த விநாயகப் பெருமானுக்கு கோயில் அமைக்கும் எண்ணம் நிறைவேறியது. 1834 ஆம் ஆண்டு கணபதி ஐயர் என்பவரால் மூன்று பரப்புக்காணியில் ஊர் மக்களின் உதவியுடன் கற்பக விநாயருக்கு ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை விநாயகப் பெருமானின் அடியார்களால் காலத்துக்கு காலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக ஆலயம் வளர்ச்சியடைந்து இன்று அழகுமிகு ஆலயமாகத் திகழ்கிறது. இன்றைய காலத்தில் கற்பக விநாயகர் மீது முழு நம்பிக்கையையும் வைத்த அன்பர்கள் இலட்சோப இலட்சம் பணத்தை ஆலயத்திருப்பணிக்கு பயன்படுத்துகிறார்கள். அந்த வகையில் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம் சிற்பம், ஓவியம், கட்டடம் விளங்க சிறப்பாக புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வந்த கலைஞர்கள் இவ்வாலயத்தைச் சிறப்புற மெருகூட்டினார்கள். இவ்வாலயத்தின் இராஜ கோபுரங்களிலும் பிரகாரங்களிலும் காணப்படுகின்ற சிற்பங்கள் மிகத் தத்ரூபமாக அன்பு, கருணை, ஆங்காரம், திருவருள் போன்ற நவரசங்களை வெளிப்படுத்தி ஆலயத்தில் அருளொளி வீசி. அனைவரையும் தம்பால் ஈர்த்தவண்ணம் உள்ளன.

ஆலயத்தின் முன்புறத்தில் அனைவரையும் ஈர்த்துக் கொண்டிருக்கும் இரு மகாபெரிய யானைகளின் தோற்றம் பார்ப்பவர் கண்களைக்கவர்வன. இவ்வாலயத்தில் காணப்படும் சிற்பங்கள் இந்தியாவின் மாமல்லபுரச் சிற்பங்களை நினைவுபடுத்தக் கூடிய வகையில் காலப் பொக்கிஷமாக எழிற்பொக்கிஷமாக திகழ்கின்றன.

விநாயகப் பெருமானின் முப்பத்திரண்டு தோற்றங்கள் கற்பக விநாயகர் ஆலயத்தின் விதானத்தில் அழகாக வரையப்பட்டுள்ளது. இராஜகோபுர வாசலில் (வெளிமண்டபத்தின்) இருபக்கங்களிலும் கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஏழு அடி உயரமான துவாரபாலகர் சிற்பங்கள் அழகுற அமைந்துள்ளன. ஆலயத்தின் முன்பக்கமாக (தெற்கு நோக்கி) சைவசமய குரவர்களின் சிற்பங்களும் புராண சம்பவங்களைச் சித்தரிக்கும் ஓவியங்களும் மிளிர்கின்றன.

இவ்வாலயத்தின் சுற்றுப் பிரகாரத் தெய்வங்களாக சிவன் , பார்வதி, நடராஜர், தெட்சணாமூர்த்தி, மகாலட்சுமி, சந்தான கோபாலர், சுப்பிரமணியர், நவக்கிரங்கள், காளியம்மன், வைரவர் சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் திகழ்கின்றன. மஹோற்சவத்தின் சிகரமாகத் திகழும் தேர்த்திருவிழாவன்று விநாயகப் பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும். அற்புத கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்வு வேண்டின் நற்பொருள் குவிதல் வேண்டின் எல்லாம் வல்ல கற்பக விநாயகர் திருத்தேர் வடம் பிடித்து இழுத்து இவை யாவும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

## வாழ்த்துச் செய்தி



இன்று உரும்பிராய் ஓடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமான் தேர் ஏறி திரு வீதி வலம் வர உள்ளார். எம்பெருமான் விநாயகப் பெருமான் சர்வாலங்கார பூஷிதராய் ஜெகஜோதியாய் திருத்தேர் பவனி வந்து பக்தர்களை காத்து அருளும் இன்றைய புண்ணிய தினத்தில் அனைவருக்கும் ஐங்கரன் அருள் பாலிக்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

திரு.கு.சிறிராம், பிராந்திய முகாமையாளர்,
அலியான்ஸ் இன்சுரன்ஸ்


மலரமைப்பு:
எஸ்.ஞானேஸ்வரன்
Allianz Insurance
(Training Agecy Leader)
Jaffna Metro



வி.எம்.கே.
பிரதேர்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

ஸியான்ஸ் ஐஸ்கிறீம்
கொண்டாட்டங்களுக்கான
ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
0776184602

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக்காரியாலயம்
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212224353
கிளை:
சுன்னாகம்
கே.கே.எஸ்.வீதி,
மதவடி முன்பாக
T.P.021 2242022
0714546956

சிவகுரு மரக்காலை
இந்துக் கல்லூரி அருகாமை,
பலாலி வீதி, உரும்பிராய்.

சிறியோர் முதல் பெரியோர் வரை
அனைத்து விதமான ஆடைகளையும்
பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
கீர்த்திகா
ரெக்ஸ்ரைல்ஸ்
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

சகல விதமான அழகு சாதனப்
பொருட்கள் மற்றும் பாதணிகள்,
பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை
பெற்றிட
உதயன் பான்சி
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
தொ.பே:-0759015884

பிரணவி தச்சுத் தொழிலகம்
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய் , சரஸ்வதி வீதி
உரிமையாளர் R.பிரபாகரன்
தொ.பே.இல. 0774192124

சகல விதமான நகைகளையும்
ஓடர் செய்து பெற்றுக் கொள்ள
நியூ கவுசிக் ஜூவல்லறி
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
T.P. 0772182647
0215685204

அலுமினிய சோக்கேஸ் வகைகள்,
ஜன்னல் கண்ணாடி வகைகள்,
டியூரோ பிறேம், பொக்ஸ் பிறேம்
மற்றும் சுவாமிப்படங்கள் என்பவற்றை
பெற்றுக் கொள்ள
அன்னை படமாடம்
கோப்பாய் வீதி,
உரும்பிராய் சந்தி.
தொ.பே. 0777989145


விக்கினேஸ்வரா
பெயின்ற் அன்
எலக்ரிக்கல்ஸ்
170, பலாலி வீதி,
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பட்டத்து யானை

## அம்புலிமாமா கதைகள்



பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது காசியிலிருந்து சற்று தூரத்தில் தச்சர்கள் வசிக்கும் ஒரு கிராமம் இருந்தது. அதில் ஐந்நூறு தச்சர்கள் இருந்தார்கள். அவர்கள் சிறு படகுகளில் சென்று ஒரு காட்டிற்குப்போய் மரங்களை வெட்டிப் படகுகளில் ஏற்றிக் கொண்டு ஊர் திரும்புவார்கள்.

அந்தக் காட்டில் ஓரிடத்தில் ஒரு பெண்யானை வசித்து வந்தது. ஒரு நாள் அதன் காலில் ஒரு மரச் சிராம்பு குத்தியது. அதனால் அதன் கால் வீங்கிவிட்டது. அந்தச் சிராம்பை அது தன் துதிக்கையால் எடுக்க முயன்றும் முடியவில்லை. அப்போது காட்டில் தச்சர்கள் மரத்தை வெட்டும் சத்தம் அதன் காதில் விழுந்தது. அது நொண்டியவாறே அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்தது.


யானை சிரமத்துடன் வருவதைக் கண்டு தச்சர்கள் அந்த யானைக்கு ஏதோ பிரச்சினை என்று அதனைக் கூர்ந்து பார்த்தார்கள். யானையும் அவர்களின் முன் வந்து படுத்துத் தன் காலை நீட்டியது. தச்சர்களும் தம் உளிகளைக் கொண்டு மெதுவாக யானையின் காலில் குத்திய சிராம்பை எடுத்து விட்டு காயத்திற்குப் பச்சிலை தடவினார்கள்.

ஓரிரண்டு நாள்களில் யானையின் கால் வீக்கம் குறைந்து சரியாகி விட்டது. அது முதல் அந்த யானை தச்சர்களுக்கு உதவி செய்யலாயிற்று. மரங்களை இழுத்து வந்தும் பாதி அறுத்த கிளைகளை ஒடித்துப் போட்டும் அவர்களது வேலைப் பளுவைக் குறைத்தது. இப்படியாக யானைக்கும் தச்சர்களுக்குமிடையே நட்பு வளராலாயிற்று.


சிறிது நாள்களுக்குப் பின் அந்தப் பெண்யானைக்கு ஒரு குட்டி யானை பிறந்தது. அது ஐராவது இனத்தைச் சேர்ந்தது. அந்தக் குட்டி யானை பால்போல் வெள்ளை நிறத்தில் இருந்தது. பெண்யானை வயதாகிவிட்டதால் எங்கும் சென்று இரைதேட முடியவில்லை.

ஆதலால் தன் குட்டியைத் தச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டு அது காட்டிற்குள் எங்கோ போய் விட்டது. அன்றிலிருந்து இந்த வெள்ளையானை தச்சர்களுக்கு மிகவும் உதவி புரிந்து , அவர்கள் கொடுத்த உணவை உண்டு, அவர்களது குழந்தைகளைத் தன் முதுகின் மீது ஏற்றி விளையாட்டுக் காட்டி நதியில் நீராடித் தன் பொழுதை கழித்து வந்தது. தச்சர்களும் அந்த யானையைத் தன் குழந்தைகளுக்கு நிகராக அன்பு செலுத்தி வந்தனர்.

காட்டில் ஒரு வெள்ளை யானை



இருப்பது தெரிந்து பிரம்மதத்தன் அதனைப் பிடிக்கத் தன் ஆட்களுடன் காட்டுக்கு வந்தான்.ஆனால், தச்சர்



கள், மன்னன் ஏதோ மாளிகை கட்டுவதற்காக மரங்களை வெட்டுவதற்காக வந்துள்ளான் என்று நினைத்து மன்னனிடம் , "மன்னா நீங்கள் ஏன் , இவ்வளவு சிரமப்பட்டு இந்தக் காட்டிற்குள் வந்துள்ளீர்கள்? நீங்கள் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் நாங்களே மரங்களை வெட்டி அரண்மனைக்கு அனுப்பி வைத்திருப்போமே?" என்றனர். இதைக் கேட்டமன்னன் "நான் ஒன்றும் மரங்களை வெட்டுவதற்கு வரவில்லை. வெள்ளை யானையை அழைத்துச் செல்லவே வந்துள்ளேன்" என்றான். இதைக்கேட்டதும் தச்சர்கள் மிகவும் வேதனைப்பட்டனர். ஆனால், யானை அவர்களிடம் இருப்பதைவிட மன்னரிடம் இருந்தால் இன்னும் நலமாகவும் [illegible] இருக்கும் என்று எண்ணி தங்களது வேதனையை அடக்கிக்கொண்டு யானையை அழைத்துச் செல்ல அனுமதித்தனர்.

ஆனால் எவ்வளவு முயற்சி செய்தும் அரசனால் அந்த யானையை அழைத்துச் செல்ல இயலவில்லை. அப்போது ஒரு வீரன் அரசனிடம் "அரசே, இதனைத் தாங்கள் பிடித்துச் சென்றால் இந்த தச்சர்களுக்கு மாபெரும் இழப்பே ஏற்படும். அதனால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கச் செய்ய இது விரும்புகிறது" என்றான்.

அந்த யானையை மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அதற்காகத் தனியாக ஒரு கொட்டகை போட்டாாகள். அது பட்டத்து யானை என அறிவிக்கப் பட்டது. அந்த யானை வந்தது முதல் காசி ராஜ்யம் செழுமையுடன் விளங்கியது. அது பெரிய நாடாகி பலம் பொருந்தியதாக இருந்தது.

அதன் மீது படை எடுக்க மற்ற மன்னர்கள் அஞ்சினார்கள். சில நாள்களுக்குப்பின் அரசி கர்ப்பவதி ஆனாள். அவளது கர்ப்பத்தில் போதிசத்வர் குழந்தையாக இருந்தார். அந்தக் குழந்தை பிறக்க ஒரு வாரம் இருக்கையில் பிரம்மதத்தன் இறந்துவிட்டான். இதே சமயம் கோசல மன்னன் காசி மீது படை எடுத்து வந்து விட்டான். என்ன செய்வதென காசியின் அமைச்சர்களுக்குத் தெரியவில்லை.

அவர்கள் கலந்து ஆலோசித்து முடிவில் கோசல மன்னனுக்குத் தூது அனுப்பினார்கள். "எங்கள் அரசியர் இன்னும் ஒரு வாரத்திற்குள் குழந்தை பெறப் போகின்றார். அவருக்குப் பெண் குழந்தை பிறந்தால் இந்த நாட்டை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் ஆண்குழந்தை பிறந்தால் எங்கள் நாடு உங்களோடு போர் புரியும்" இது தான் அவர்கள் விடுத்த செய்தி.


கோசல மன்னனும் அது கேட்டு ஒரு வாரம் காத்திருந்தான். வார முடிவில் அரசியின் மகனாக போதிசத்வர் பிறந்தார். காசியின் படை கோசல மன்னனின் படையை எதிர்க்கலாயிற்று. போரில் கோசலப் படையின் கை ஓங்குவது கண்டு காசியின் அமைச்சர்கள் அரசியிடம் போய் "அம்மணி! நம் பட்டத்து யானை போர்க்களத்திற்குச் சென்றாலே நமக்கு வெற்றி கிடைக்கும். ஆனால், அரசர் இறந்ததிலிருந்து அந்த யானை உணவும் உறக்கமும் இல்லாது துக்கத்தில் கிடக்கிறது" என்றனர்.

அரசனும் அதன் ஒவ்வொரு காலருகிலும் தந்தத்தின் அருகிலும் வாலின் பக்கத்திலும் ஒவ்வொரு லட்சம் வராகன்கள் வீதம் வைத்து தச்சர்களிடம் அந்தப்பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறியும் குழந்தைகளுக்கும் மனைவிகளுக்கும் அது கேட்டு அரசி தன் குழந்தைகளுக்கு அரச ஆடைகளை அணிவித்து அதனை எடுத்துக்கொண்டு போய் அந்த வெள்ளை யானையின் காலடியில் வைத்து "கஜராஜனே! உன் எஜமானார் இறந்தாரே எனக் கவலைப் படாதே. இதோ அவரது மகனான உன் எஜமானன். இவரது எதிரி போர்க்களத்தில் வெற்றி முழக்கம் செய்யப்போகிறான். அவனை வென்று உன் எஜமானனை காப்பாற்று! அப்படிச் செய்ய விருப்பம் இல்லாவிட்டால் இப்போதே இக்குழந்தையை மிதித்துக் கொன்று விடு" எனக் கூறினாள்.

அதுவரை துயரத்தில் மூழ்கிக் கிடந்த யானை தன் துதிக்கையால் அக்குழந்தையைத் தடவியது. பிறகு அதனைத் தூக்கித் தன் முதுகின் மீது வைத்து விட்டுப் பிறகு அரசியிடம் கொடுத்து விட்டுப் போர்க்களத் திற்குச் சென்றது.

அந்த யானையின் தாக்குதலை கோசலப்படையால் சமாளிக்க முடியவில்லை. அது பயந்து சிதறிப் போர் முனையிலிருந்து ஓடிவிட்டது. வெள்ளை யானை நேராக கோசல மன்னனின் முன்போய் அவனைத் தன் துதிக்கையால் சுற்றி எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து குழந்தையாக உள்ள போதிசத்வரின் முன்போட்டது. கோசால மன்னனும் அக்குழந்தையிடமும், அரசியிடமும் மன்னிப்பைப் கோரினான். அமைச்சர்களும் அரசியும் அவனை மன்னித்து அவனது நாட்டிற்குப் போக அனுமதித்தார்கள்.

போதிசத்வர் ஏழு வயதாகும் வரை வெள்ளை யானையே காசியைக்காத்தது. அதன் பின் போதிசத்வர் காசி மன்னனாகி அந்த யானையே தன் பட்டத்து யானையாக்கி நாட்டை ஆண்டு வந்தார். அரசன் பட்டாடைகளும் பரிசும்



கொடுத்தான். அதன் பின்னரே அது அரசனோடு தலைநகருக்குச் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சிரம அதிசயங்கள்

...சிக்கலான விடயங்களையும் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் அவர் கொடுக்கும் விளக்கம் அதன் இனிமை ஆஹா எத்தனை பிறவியே எடுத்துக் கேட்டாலும் சலிக்காது. பொதுவாக மகான்கள், ஞானிகளின் கருணை வடிவானவர்கள் என்று படித்திருக்கிறேன். அதை நேரில் காணும் பாக்கியத்தை இந்த சித்தர் மாமனிதரிடம் அடைந்தேன்.

அன்று இரவு சுமார் எட்டுமணிக்கு மேல் இருக்கும். சித்தர்பெருமானிடம் வழக்கம்போல் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது இரவின் அமைதியில் ஏதோ மரம் முறியும் ஒசை நாங்கள் அமர்ந்திருந்த இடத்திலிருந்த ஒரு நூறடி தூரத்தில் இருந்த பேய் முருங்கை மரத்திலிருந்து எழுந்தது. திடுக்கிட்டு திரும்பி அவ்விடத்தை நோக்கினேன். சுற்றிலும் நின்றிருந்த மரங்கள் அசைவின்றி நிற்க, காற்று வீசாத நேரத்தில் எப்படி ஒரு பெரும் கிளை முறிந்திருக்கும். ஒருவேளை யாராவது திருட்டுத்தனமாக மரம் வெட்டுகிறார்களோ! அப்படியே என்றாலும், பேய் முருங்கை மரத்தை யாரும் வெட்டமாட்டார்களே என்று உள்ளம் தனக்குள் கேள்வி கேட்டு பதில் கூறிக்கொண்டு அலை பாய்ந்தது.

அதேநேரம் முப்பது அடி தூரத்தில் உள்ள பனை மரத்தில் சாய்ந்து தொங்கிக் கொண்டிருந்த மட்டைகள் மீது யாரோ போய் விழுந்ததைபோல பொத் என்ற சத்தம் கேட்டது. இது சில நொடிகள் தொடர்ந்து நடந்தன. புரியாமல் சித்தர்கள் அவர்களைப் பார்த்து என்ன சாமி இது? என்ற அச்சத்துடன் வினவ பலமாக சிரித்த அவர் அது ஒன்றுமில்லை ராஜா! இங்கு ஒரு வேதாளம் இருக்கு. இன்று அது வரும் நேரத்தில் நாம் இருக்கிறோம் அல்லவா! அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியினால்தான் இப்படி மரம் தாவுகிறது. நமக்கு வேடிக்கை


சாதுக்களுக்கு வஸ்திர ஸ்தானம்

காட்டுகிறது. அந்த வேதாளம் நம்ம வேதாளம்தான்!, என்று கூறி மீண்டும் சிரித்தார். நான் புரியாமல் விழித்தேன்.

. உதய சூரியனை எதிர்நோக்கி படுக்கையில் உறக்கமில்லாமல் உருண்டு கொண்டிருந்தேன். காலையும் வந்தது. ஆவல் மிகுதியால் இரவில் உடைந்த, ஒலி வந்த மரங்களை நோக்கி விரைந்தேன்.

மரங்கள் முழுமையாக சிதைவில்லாமல் என்னைக் கண்டு சிரித்தன. பனை மட்டைகள் காற்றில் ஆடி எனக்கு டாடா காட்டின. இது எனக்கு பேரதிசயமாக இருந்தது. ஆனால் இதுபோல் அனுபவம் எனக்கு அடிக்கடி கிடைத்தது. அப்போதுதான் பேய், பிசாசு, வேதாளம் எல்லாம் கற்பனையல்ல என்ற உண்மையின் ஆராய்ச்சியை தொடங்கினேன்.

ஒருநாள் மாலைநேரம், ஆச்சிரமத்தில் அன்று நிறைய அன்பர்கள் கூடி இருந்தநேரம். ஆச்சிரம மரங்கள் அடர்ந்த ஒரு ஒதுக்குப் புறத்தில் அமைந்து இருந்ததைப் பற்றி முன்னரே கூறியிருக்கிறேன். இங்கே நிறைய பாம்புப் புற்றுகள் பெரியளவில் காணப்படும். ஆங்காங்கே பாம்பு சட்டைகள் உரிந்து கிடக்கும். ஆனால், அங்கு வந்து போவோர்



## ஆன்மீகம் 40

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

எவருக்கும் எந்தத் தீங்கும் நடந்தில்லை.

நானே ஒரு பாம்பைக்கூட நேரில் பார்த்தது இல்லை, ஆனால் அன்று அதிசயமாக ஆறடிக்கு மேல் நீண்டதொருபாம்பு ஆச்சிரமத்திற்குள் புகுந்தது. கூட்டத்தைக் கண்டதும் படம் எடுத்து சீறியது. எல்லோருக்கும் எமபயம். பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்களே. இன்று யாருக்கு முடிவோ, என்றெண்ணி என் இதயமே நின்றுவிடும்போல் இருந்தது. சினிமாவுக்கு கொண்டு வரும் பாம்புகளைப் பார்த்து பழக்கப்பட்டிருந்தாலும், இது பாம்பாட்டியின் பல் பிடுங்கிய பாம்பல்ல நாகம், என் உடல் வியர்வையால் நனைந்தது.

தொடரும்

---

பிரித்தானிய ஊடகமான *தி ஹாடியன்* நாளேட்டில் *எமிலி கெளவி* எழுதியுள்ள கட்டுரையிலிருந்து...

# அவுஸ்திரேலிய அரசும் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர்களும்

இலங்கையர்கள் அவர்களது சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புவதன் மூலம் அவர்கள் அங்கே பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம் என்பது தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கம் குருட்டுத்தனமாக செயற்படுகின்றது.

கடந்த வார இறுதியில் அவுஸ்திரேலிய அரசாங்கம், படகுமூலம் சட்டரீதியற்ற வகையில் குடியேறிய இலங்கையர்களின் ஒரு தொகுதியினரை மீண்டும் அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பியுள்ளதானது, அவுஸ்திரேலியா தனது அனைத்துலக சட்டக் கடப்பாடுகளை மதிக்கத் தவறியுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஓகஸ்ட் 2012 தொடக்கம் இன்றுவரை அவுஸ்திரேலிய அரசாங்கமானது தனது நாட்டில் அரசியற் தஞ்சம் கோரிய 200 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளடங்கலாக 1035 இலங்கையர்களை அவர்களது விருப்புக்கு எதிராக இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

இது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கையாகும். இவ்வாறு இலங்கையர்களை அவர்களது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புவதன் மூலம் அவர்கள் அங்கே பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம் என்பது தொடர்பில் அவுஸ்திரேலி அரசாங்கம் குருட்டுத்தனமாக செயற்படுகின்றது. இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்கள் இலங்கையில் எவ்வாறு நடாத்தப்படுகின்றனர் என்பது தொடர்பில் அவுஸ்



திரேலியா போதியளவு கண்காணிப்பை மேற்கொள்வதில்லை.

இலங்கையில் பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக மனித உரிமைகள் கணிகாணிப்பகம், அனைத்துலக சட்டவாளர் சங்கம் மற்றும் அனைத்துலக மன்னிப்புச்சபை போன்றவற்றால் வெளியிட்ட ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவை அடையும் புகலிடக்கோரிக்கையார்களிடம் அந்நாட்டு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான புகலிடக் கோரிக்கையாளர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்போது, அவர்களுக்கு சட்ட ஆலோசனைகள், அவர்களது உரிமைகள் தொடர்பான தகவல்கள் போன்றன வழங்கப்படாததுடன் வெளிப்படைத்தன்மையும் பேணப்படுவதில்லை. அத்துடன் பெரும்பாலான புகலிடக் கோரிக்கையாளர்களின் வழக்குகள் சுயாதீனமாக மீளாய்வு செய்யப்படுவதில்லை.

அவுஸ்திரேலியச் சட்டத்தின் கீழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பாக மிக நேர்மையான, நீதியான, சரியான மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்திலுள்ள தீர்மானம் எடுக்கும் அதிகாரிகள் பிழையான தீர்வை முன்வைக்கிறார்கள். கடந்த ஆண்டில் அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்தால் படகுகள் மூலம் சென்றடைந்த இலங்கையர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட பிழையான- 82 சதவீதமான வழக்குகள் மீண்டும் அகதிகள் மீளாய்வு நீதிமன்றில் மேன்முறையிடப் பட்டுள்ளன.


வெளிநாடுகளில் புகலிடம் கோரிய இலங்கையர்கள் பலர் தமது நாட்டு அரசாங்கப் படைகளால் அனுபவித்த சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள், தொந்தரவுகள் மற்றும் ஏனைய துன்புறுத்தல்கள் தொடர்பாக புகலிடக் கோரிக்கையின்போது தெரிவித்த பின்னரும் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவதால் இவர்கள் மிக ஆபத்தைச் சந்திப்பதை அதிகரித்து வரும் சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. சட்ட ரீதியற்ற வகையில் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு புகலிடம் கோரி மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவோர் சித்திரவதைகளுக்கு ஆளாவதற்கான ஆபத்து அதிகம் உள்ளது.

இந்த ஆதாரத்தைச சுட்டிக்காட்டிய பிரித்தானிய நீதிமன்றமானது பெப்ரவரி 2013 இல் தனது நாட்டிலிருந்து புகலிடக் கோரிக்கையாளர்களை மீண்டும் இலங்கைக்கு பலவந்தமாக அனுப்பும் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்திவைத்தது.

ஐக்கிய நாடுகள் சபையானது திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்கள் ஆபத்தை எதிர்கொள்வதை ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் அங்கே சித்திரவதைகளுக்கு ஆளாவதாக சாட்சியங்கள் கூறியபோதிலும் பிரித்தானியாவானது தனது புகலிடக் கோரிக்கை கொள்கையை மீளாய்வு செய்யவில்லை என மே மாதத்தில் சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. வல்லுனர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மறுபுறத்தே, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகும் ஆபத்து காணப்படவில்லை என்பது கண்காணிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இவ்வாறு பலவந்தமாக திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்களுக்கு 400 இலங்கை ரூபாய்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. கொழும்பு விமான நிலையத்தில் இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்களை இலங்கை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்துவதுடன் சட்டரீதியற்ற வகையில் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றதற்காக உள்நாட்டுச் சட்டத்தின்படி இவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இந்நிலையில் பாதிக்கப்பட்ட இலங்கையர்களை அவுஸ்திரேலியாவோ அல்லது எந்தவொரு அனைத்துலக அமைப்புகளோ கண்காணிப்பதில்லை என்பது வெளிப்படை.

இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்கள் எவ்வித ஆபத்தையும் எதிர்கொள்வதில்லை எனவும் இதுவரை அவுஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட 1000 இலங்கையர்களில் நான்குபேர் மட்டுமே சித்திரவதைகளுக்கு உட்பட்டதாக முறைப்பாடு பெறப்பட்டதாக



வும் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பொப் கார் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தாம் சித்திரவதைகளுக்கு உள்ளாவதாக இதுவரையில் கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஆணையகத்தில் எவ்வித உத்தியோகபூர்வ முறைப்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது தெரியவந்ததாக அவுஸ்திரேலி வெளியுறவுச் செயலகம் மற்றும் வர்த்தக அதிகாரிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஆணையகத்திடம் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடுகளை மேற்கொள்வதில் வெளிப்படையாக பல தடைகள் காணப்படுகின்றன. தம்மை மீள அனுப்பிய ஒரு அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் ஆணையகத்திடம் குறிப்பாக இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றும் ஆணையகத் திடம் தாம் எதிர்நோக்கும் துன்புறுத்தல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதில் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் நம்பிக்கை கொள்ளாதிருக்கலாம். இதற்கும் மேலாக கொழும்பிலுள்ள அவுஸ்திரேலியத் தூதரகத்திற்கு தாம் முறைப்பாடு செய்யச் செல்லும் போது தாம் கண்காணிக்கப்படலாம் என்ற ஒரு அச்சமும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் எழுந்திருக்கலாம்.

அவுஸ்திரேலியாவானது தன்னால் திருப்பி அனுப்பப்படுபவர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாகக் கூடாது என்பதை உறுதிப்படுத்திய பின்னரே அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பது இதன் உள்நாட்டு மற்றும் அனைத்துலக சட்டக் கட்டுப்பாடுகளாகும். ஆனால், இந்நிலையில் அவுஸ்திரேலியாவால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவோர் அங்கே சித்திரவதைகளுக்கு உள்ளாகுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இது தொடர்பில் அவுஸ்திரேலியா தனது நடைமுறையைப் பரிசீலிக்க வேண்டிய தேவையுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவியடி ஜெயவீரகத்
# தேர்த்திருவிழா சிறப்பு

### அருளாசிச் செய்தி

விநாயகர் அடியார்களுக்கு,



யாழ்ப்பாணம் நீராவியடி பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சிபுரியும் வீரகத்தி பெருமானுக்கு இன்று புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதனையிட்டு மகிழ்வடைகின்றோம்.

திருவிழாக்களில் சிறப்புப் பெறுவது தேர்த் திருவிழாவாகும். ஐந்தொழிலைப்புரியும் சம்ஹார உற்சவத்தில் தேர்த்திருவிழா அஞ்ஞான ஒளியை நீக்கி மெய்ஞ்ஞான ஒளியைத் தருவதாகும். மும்மூர்த்திகளின் வடிவமான தேர் கீழ்ப்பகுதி பிரம்மாவாகவும் நடுப்பகுதி விஷ்ணுவாகவும் மேற்பகுதி உருத்திரனாகவும் தேரின் வடிவம் அமையப்பெறுகிறது.

நான்மறைகள் குதிரைகளாகவும் சூரிய சந்திரன்கள் சக்கரங்களாகவும் உருவாக்கப்படும் தேர் விஸ்வப்பிரம்மா சமூகத்தினால் இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படுவதாகும். இப்பு னிதப் பணியை செயற்படுத்தியிருக்கும் நீரை ஆவியாகவும் திருக்கேணியினைக்கொண்ட ஆலயத்திற்கு கிடைத்திருப்பது மிகச்சிறப்புக்குரியதாகும். பரம்பரை தர்மகர்த்தா கொண்ட இவ்வாலயம் இப்பிரதேச மக்களுக்கு தனித்துவமான சிறப்பை உடையதாகும்.

இவ்விநாயகப்பெருமானை அனைவரும் போற்றி வணங்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், இரண்டாவது குருமஹா சந்நிதானம்**

### ஜெயவீரகத்தி விநாயகரே ஜெயந்தர வருக

நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகருக்கு



இன்று தேர்த் திருவிழா. புதிய அழகிய சித் திரத்தேரிலே ஆரோகணித்து அருள்பாலிக்கின்ற பொன்னான நன்னாள் இன்றாகும்.

ஆலய மஹோற்சவத்திலே தேர்த்திரு விழா அழித்தலைக் குறிக்கும். விநாயகர் தோன்றியதே அசுரனை அழிப்பதற்காகும். வினை தீர்க்கும் ஜெயவீரகத்தி விநாயகப்பெருமான் அடியார்க்கு ஜெயமருளும் இந்த நல்ல நாளில் அல்லல்களை அழித்து நல்லருள் புரியும் வண்ணம் பிரார்த்தித்து அனைத்தும் சிறப்புற நிகழ வாழ்த்தி வணங்குகின்றோம்.

காரைக்கால் வேதாரண்யத்திலிருந்து யாழ்.நீராவிப்பதிக்கு வந்த விநாயகப் பெருமான் முதலியார் பெருமக்களின் இடைவிடாத பெருமுயற்சியால் இன்று புதிய தேர் மீது இவர்ந்து அருள்மிகு அற்புதக் காட்சியளிக்கின்றார். இதனைக் கண்டு களித்து பேரானந்தப் பெருவாழ்வில் இன்புற்றிருக்க அவனருளையே நாடித்தேடி அன்பர் ஆனந்தமுற ஆசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்''

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்.**

### அடியாரின் வாழ்த்துச் செய்தி



நீராவிப் பதிமேவும் நாயகனே போற்றி போற்றி
ஆரா அமுதே அருட்கடலே போற்றி போற்றி
தேராப் பிழை பொறுக் கும் தேவனடி போற்றி போற்றி
தேரில் வந்து வினை தீர்ப்பாய் போற்றி போற்றி

யாழ்ப்பாணம் நீராவியடிப் பதியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகரின் தேர்த்திருவிழா சிறப்புற நடைபெற வாழ்த்துவதோடு திருத் தேரினைக் காணவரும் அடியார்கள் அனைவருக்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் பெற்று சீரும் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றேன்

**க.சிவகுமாரன்**

### ஆசியுரை



ஈழமணித்திருநாட்டின் வடபால் சென்னி என விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவ மணம் கமழும் நீராவி என்னும் பதியிலே வீற்றிருந்து வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் அருள்மிகு ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் அவர்கள் நீராவிப் பிள்ளையார் மேல்வைத்த ஆழ்ந்த பக்தி காரணமாக மரபுவழியாகப் பெற்ற ஐம்பது பரப்பு காணியையும் நீராவிப் பிள்ளையாருக்கே கொடுத்துவிட்டார். சிறியளவில் இருந்த குடும்ப கோயில் இன்று அவரது காணியின் வருவாய்களால் புதுப்பொலிவு பெற்று மிளிர்கின்றது.

ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு எம்பெருமான் தேரேறிவரும் இந்நாளில் மக்கள் அனைவருக்கும் சகல சௌபாக்கியங்களை அள்ளி வாரி வழங்கி என்றென்றும் இவ்வாலயம் சிறந்து விளங்கவேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் பாதார விந்தங்களை உளமார பிரார்த்திக்கின்றேன்.

**ஆலய அர்ச்சகர்**
**சிவஸ்ரீ பாரதிதாசசர்மா**

### மஹோற்சவ குருவின் ஆசியுரை



யாழ்ப்பாண மாநகரிலே கலையும் கலாசாரமும் பண் பாடும் சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்து காணப்படும் கிராமங்களுள் நகரை அண்மித்த நீராவியடிக் கிராமமும் ஒன்றாகும். இங்கு சைவத்தின் சிறப்பைப் பறை சாற்றும் பலகோயில்கள் காணப்பட்டாலும் விநாயக வழிபாட்டின் பெருமையைப் புலப்படு த்தும் விதத்தில் வானுயர உயர்ந்து நிற்கும் இராஜகோபுரம் உடைய வீரகத்தி விநாயகர் ஆலயம் கடந்த பல வருடங்களாக பெருந்திருப் பணிகளை மேற்கொண்டு தொய்வின்றி சிறப்புற நிறைவேற்றிக் கொண்டு வருகின்றனர். திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ண மாக இவ்வாலயம் விளங்குகின்றது. அதின் அம்சமாக இவ்வளவு நாட்களும் அலங்கார உற்ச வம் நடைபெற்ற இவ்வாலயத்தில் முதன்முதலாக தற்போது துவஜாரோகணம் நடைபெறவும் முதன்முதலாக புதியதோர் அழகிய சிற்பத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்டவிழா நடைபெற இருப்பதையிட்டு அகமகிழ்ச்சி அடைகின்றோம். இந்தத் தேரை உருவாக்கிய கலைஞர் நாடறிந்த சிற்பக் கலைஞர் திரு நடராஜன் சிவபாலன் அவர்கள். இவரின் கைவண்ணம் போற்றுதற்கு ரியது. இந்தத்தேரை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தை மனதிற்கொண்டு அதை அல் லும் பகலும் அயராது உழைத்து செயற்படுத்திய நிர்வாகத்தினர், அடியவர்கள் அனைவரையும் நாம் நன்றியுடன் இந்த நேரம் நினைவுகொள்ளவேண்டும். அவர்களுக்குப் பெருமானின் திருவருள் நிச்சயம் கிடைக்கும்.

திருவிழாக்களுள் தேர்த்திருவிழா தனி இடத் தைப் பெறுகின்றது. ''ஊர் கூடித்தேர் இழுத்தல்'' என்பது மரபாகும். இங்கு சமூகம் ஒன்றுபட்டு நிற்பதைக் குறிக்கின்றது. ஆண்டவன்முன் அனைவரும் சமம் என்ற நிலை காணப்படுகின்றது. கூட்டுறவு இங்கு வலியுறுத்தப்படு கின்றது.

**''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''**

**சிவஸ்ரீ.ச.சந்திரகுமாரக்குருக்கள்**
**(மஹோற்சவ கால பிரதம குரு, கிரியா கலாபமணி),**
**கல்வியங்காடு.**

### சிற்பாச்சாரியார் வாழ்த்துரை



விநாயககே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதன். பக்தியுடன் வேண்டிவரும்அடியவர்களின்வினைகளை வேரறுத்து அருளாசி வழங்குகின்ற நீராவிப்பிள்ளையார் தனக்குரிய தேரினைச் செய்யப்பணித்தது நான் செய்துள்ள பூர்வ புண்ணியமாகும். நீராவிப்பிள்ளையார் என் மனதுள் நின்று இன்னது இன்னது இன்னவாறு செய்யவேண்டும் என்று உணர்த்தி அவரது சித்திரத் திருத்தேரினை உருவாக்கிய வண்மையை எப்படி எடுத்துரைப்பேன். திருத்தேரில் விநாயகப்பெருமான் பவனிவரும் திருக்கோலத்தைக் காணத் தவம் இருக்கின்றேன். எல்லாம்வல்ல பரம் பொருள் சிறியேனையும் ஆட்கொண்டு ஆசி வழங்க அவரது பாதங்களைப் பணிந்து பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சிவபாலன்**
**சிற்பாச்சாரியார்.**

### ஆசிச் செய்தி



அஜம் நிர்வி கல்ப்பம் திராகார மேகம்
நிராதம் கமத்வை தயானந்த பூர்ணம்!
பரம் நிர்க்குணம் நிர்விசேஷம் நிரீஹம்
பரபிருஹ்மரூபம் கணேசம் பஜேப!
–கணேச துவாதச மஞ்சரி

மேலேயுள்ள சுலோகத்துக்கு அடியேனுடைய குரு வரிகிய வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ ரி.கே.சீதா ராம சாஸ்திரியார் அவர்கள் பின்வருமாறு உரை எழு துகிறார்.

பிறப்பற்றவரும் எல்லா ஆன்மாக்களிடத்திலும் கலந்திருப்பவரும், அருவமானவரும், ஒன்றாக விளங்குபவரும், ஆத்தியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்ற மூன்று துக்கங்களைக் கடந்தவரும் அத்துவிதமானவரும் ஆனந்தம் நிரம்பியவரும் யாவருக்கும் மேலானவரும், சத்துவம், ராட்சதம், தாமதம் என்ற மூன்று குணங்களற்றவரும் (பொது இலக்கணம் கூற முடியாவிடினும்) சிறப்பு இலக்கணம் கூறி விளங்கப்படுத்த முடியாதவரும் பிரபஞ்சங்களைப் படைத்து அதன் லீலைகளைக் கண்டும் பற்றற்றவரும் பரப்பிரம்ப ரூபியாக விளங்குபவரும் ஆகிய விநாயகப் பெருமானை வழிபடுகின்றோம்.

இச்சுலோகத்தை மனனம்செய்தும் அதன்பொருளை விளங்கியும் பாடிப்பரவி விநாயகப்பெருமானை வழிபடல் நன்று. திருவிழாக்காலங்களில் அவ்வாறு செய்தல் மிக நன்று.நீராவி ஜெயவீரகத்தி விநாயகப்பெருமானின் திருவிழா விஜய வருடமாகிய இவ்வருடம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர், தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடைய திருவருள் கைகூடியுள்ளது.

**சுவாமிஐயர் பஞ்சாட்சர ஐயர்**
**காசிநாதர் வளவு, ஸ்ரீஞானவைரவர் ஆலய பிரதம குரு,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

### வாழ்த்துச் செய்தி



அருள்மிகு ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகனை வழிபடும் பாக்கியம் எனது மூன்றாவது வயதில் ஆரம்பித்தது. 1968ஆம் ஆண்டிலிருந்து கோயிலில் வாழும் பாக்கியம் பெற்றேன். அருள்மிகு எம்பெருமானை வழிபடும் அடியார்கள் மிகவும் பாக்கியம் பெற்றவர்கள். எம் பதியில் கோயில்கொண்டு அருள் பாலிக்கும் விநாயகரின் ஆலயம் இருநூறு வருடங்களுக்கு மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்டது. வேதாரணியத்திலிருந்து இங்கு வந்து குடியேறிய வாணிபச் செட்டிய வம்சத்தவரால் இக்கோயில் நிறுவப்பட்டு பூஜிக்கப்பட்டது. அக்காலத்திலேயே பெரும் பரப்பளவும் ஆழமும் கொண்ட கேணி அமைக்கப்பட்டமை இக்கோயிலின் அதி சிறப்பாகும்.

தொடர்ந்து அந்தணப் பெருமக்களாலும் சைவப் பெருமக்களாலும் வழிபடப்பட்டு பூதம் என்றழைக்கப்பட்ட பூலோக முதலியாரால் பரிபாலிக்கப்பட்டது. அதன்பின்னர் "மடத்து ஆச்சி'' "செல்லக்கா'' என சூழவுள்ள மக்களால் அழைக்கப்பட்ட செல்லம்மாவினால் பரிபாலிக்கப்பட்டது. அவர் கோயிலின் முன்றலில் நடத்திய கூட்டத்தில் கோயிலுக்குச் செய்யவேண்டிய அபிவிருத்தி பற்றிக்கூறினார். அதில் நானும் கலந்து கொண்டேன். அவையாவும் திரு. இரகுநாதமுதலியாரால் மிகச் சிறப்பாக அரும்பாடுபட்டு நிறைவேற்றப்பட்டு எம்பெருமான் கம்பீரமாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

செல்லம்மாவினால் ஆரம்பிக்கப்பட்ட பத்துநாட்கள் அலங்கார உற்சவம் பிரம்மோற்சவமாக மாறி கொடிஸ்தம்பம் ஸ்தாபிக்கப்பட்டு எம்பெருமான் தேரில் பவனி வந்து எம்மவர் எல்லோருக்கும் அருள்பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். இம்மாபெரும் கைங்கரியத்தை ஒரு பெரிய குடும்பம் நிறைவேற்றுவது அசாதாரணத் துணிச்சல். இவர்களது இத்தொண்டு கோயில் வரலாற்றில் ஒரு மைல்கல்.


**கலாநிதி க.குணராசா**

### இன்னல்கள் நீக்கும் விநாயகப் பெருமான்



சிவபூமி என்று அழைக்கப்படும் இலங்கை மண்ணின் யாழ். மாவட்டத்தில் நல்லூர் பிரதேசத்தில் நீராவிப் பதியில் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் அடியார்களின் இன்னல்கள் நீக்க இன்று தேரேறி வருகிறார். இந்த நல்ல நாளிலே இப்பணிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த இக்கோயில் நிர்வாகத்தினருக்கும் அடியவர்களுக்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் என்றும் நிலைத்திருக்கும். அத்துடன் அடியவர்கள் வாழ்வில் இன்னல்கள் போக்கி என்றும் அருள்பாலிக்க விநாயகப் பெருமான் தேரேறி வரும் கண்கொள்ளாக் காட்சியை அனைவரும் கண்டு வாழ்வில் இன்புற்றிருப்போமாக.

**குட்டித்தம்பி குடும்பம்**
**kuddythambyfamily@gmail.com**



### தேர்த்திருவிழா வாழ்த்துரை



''திருவாரூர் தேர் அழகு'' சிறுவயதில் தேடலாய் மனதில். திருவாரூர் தியாகராஜப் பெருமானின் மிகப்பெரிய கட்டுத்தேரை இழுக்கும் பாக்கியமும் பெற்றிருந்தேன். முன்னர் இத்தேர்ப்பவனி வரப்பல நாட்கள் எடுக்கும்.

''திருப்பல்லாண்டு'' பாடி சேந்தனார் சிதம்பரத்தில் ஸ்ரீநடராஜ மூர்த்தியின் ஓடாது நின்ற திருத்தேரை தானாகவே ஓடச்செய்தார். அத்தேர் விழாவையும் கண்டு களிக்கு புண்ணியமும் எனக்கு- எங்களுக்கு!

இவ் அற்புதங்கள் தேடலாய் எங்களுள் அலங்கார [illegible] விழாக்களை எங்களை வைத்து நடைபெறச் செய்தார். மனதுள் ஒ[illegible] நெருடல் ஆசை! நீராவிப்பிள்ளையார் கொடியேறி அழகிய சித்திர தேரில் பவனி வரவேண்டும்.

வேண்டுவார்வேண்டுவதைக் கொடுப்பவர் அல்லவா.

மஹோற்சவம் நடைபெறும் காலம் வந்துவிட்டதை நீராவி பிள்ளையார் தாமாகவே எங்களுக்கு உணர்த்தினார். கொடிமரம் திருத்தேர் போன்ற பாரிய வேலைகளைத் தாமே தகுதியானவர்களைத் தெரிந்து பலரும் போற்றும் வண்ணம் நிறைவேற்றினார். அவர் இட்ட பணியை அவர் வழிகாட்டலில் செய்து வருகின்றோம்.

''செயலாவது யாதொன்றும் இல்லை தெய்வமே...'' எல்லாம் உன் செயலே என்று உணரப்பெற்ற அனுபவம்- ஆனந்தம் எங்களுக்கு!

நீராவிப் பிள்ளையார் அடியவர்கள் பலர் உள்ளத்தில் தோன்றாத் துணையாக நின்று ஊக்கப்படுத்தி அருள் வழங்கி மஹோற்சவ விழாக்களை மிக்க சிறப்பாக நடத்துவிக்கின்றார்.

**வை.இரகுநாதமுதலியார்**
**ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்,**
**ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.**

### வாழ்த்துச் செய்தி



சீர்வளரும் சிவபூமியாம் யாழ்ப்பாண நன்னகரில்
யார்வரினும் அருள்பொழியும் நீராவியடி கணபதியான்!
நாள் தவறாமல் காரைநகர் மருதடியில் கைகூப்பி


தொழுது வந்த என்னை தன்னருகே அழைத்து வந்து அருள்பொழிந்தான்.

கல்வி, தொழில் என்பவற்றின் வளர்ச்சிக்கு நான் வந்த நாள்முதல் சொந்தத் தந்தைபோல் பேரருள் புரிந்தான். அமைதியாய் இருப்பான். அன்றுமுதல் இன்று வரை அவனது பக்தர்களை ஒருபோதும் கைவிடான். ஆலயத்தினுள் செல்ல செல்ல ஆன்ம விடுதலைக்கான அதிசய அருளைப் பொழிவான். முதன்முதலில் தேர் ஏறிவந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்க திருவுள்ளம் கொண்டிருக்கும் விக்கின கணபதியை விழிமேல் நீர் சொரிய கைகூப்பி நிற்கின்றேன்.

**V.N.பத்மநாதன்**
**அதிபர், யாழ். அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகத்தி விநாயகர் ஆலய
# பு மலர்-௨௨.06.௨013



### தேரேறி வருகிறார் நீராவியடி வீரகத்தி விநாயகர்



சைவமும் தமிழும் தழைத்து உயர்ந்தோங்கும் யாழ்ப்பாண குடாநாட்டின் மையத்தில் இருக்கின்றது நீராவியடி. இது யாழ்ப்பாண நகரத்தின் ஒருபகுதியாக இருந்தாலும் இங்கே கிராமிய மணம் கமழ்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களும் கொண்ட வீரகத்தி விநாயகர் நீராவியடியின் நடுவில் அமர்ந்திருக்கின்றார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஒரு காலத்தில் செல்வம் செல்வாக்குடன் பெரும் நிலக்கிழாராக விளங்கிய சிறாப்பர் குடும்பத்தினரே நீராவியடியில் வீரகத்தி விநாயகர் கோவிலையும் நிறுவி அருகில் ஒரு கேணியையும் வெட்டிவிட்டனர்.

சிறிய கோயிலாயினும் மூன்று காலப்பூஜைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. விசேட தினங்கள் கொண்டாடப்பட்டன. பத்து நாட்கள் அலங்காரத்திருவிழாக்கள் வருடந்தோறும் தவறாமல் நடைபெற்றன.

முதலில் நிறுவப்பட்ட கோவிலானதினாலும் அது ஒழுங்காக நடைபெற்று வந்தமையாலும் வீரகத்தி விநாயகர் நீராவியடி மக்களின் குலதெய்வமாக விளங்கினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளும் நீராவியடியிலேயே நிறுவப்பட்டுள்ளன. அவற்றுக்கும் அக்கல்லூரிகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சைவ பரிபாலன சபைக்கும்கூட சிறாப்பர் குடும்பத்தினர் நிலங்கள் நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள்.

சிறாப்பர் குடும்பத்தின் கடைசி ஆண்வாரிசாக விளங்கிய சம்பந்தநாதமுதலியார் 1975ஆம் ஆண்டு கோவில் நிர்வாகத்தை தமது ஒன்றுவிட்ட சகோதரி வைத்திலிங்கம் செல்லம்மாவிடம் கையளித்தார்.

அவர்களுடைய நிர்வாக காலத்தில் அவர்களது மகன் இரகுநாத முதலியார் கோவிலைமேலும் கட்டியெழுப்பினார். இரண்டு பெரிய மண்டபங்களை அமைத்ததுடன் வீதிக்கும் கொட்டகையிட்டார். முகப்பில் அழகிய கோபுரம் ஒன்றும் கட்டப்பட்டது. அது கம்பீரமாக உயர்ந்து நின்று எல்லோரையும் அழைக்கின்றது.

இப்பொழுது பெரிய தேர்முட்டியையும் கட்டி ஓர் அழகிய தேரையும் செய்வித்திருக்கிறார் இரகுநாதன். வீரகத்திவிநாயகர் தேரேறி வரப்போகிறார். தேரேறிவரும் விநாயகனை வாழ்த்துவோம். அவன் எங்களுக்கு மேலும் அருள்பாலிக்க வேண்டும்! நன்று வேண்டுவோம்!

**கலாபூஷணம் அராலியூர்**
**ந.சுந்தரம்பிள்ளை**

### வாழ்த்துரை



யாழ்ப்பாணம்நீராவியடி அருள் மிகு வீரகத்தி விநாயகர் ஆலய முதலாவது மஹோற்சவப் பெருவிழா (12.06.2013 முதல் 24.06. 2013) இவ்வாண்டு மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்குத் திருவருள் பாலித்திருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். இந்து சமய வழிபாட்டு மரபில் விநாயகர் வழிபாட்டிற்கு முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணம் நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையும் வழிபாட்டுச் சிறப்பு மிக்கதாகவும் விளங்குகின்றது.

அலங்கார உற்சவம் நடைபெற்று வந்த இத்திருத்தலத்தில் இவ்வருடம் முதலாவது மஹோற்சவ விழாவும் பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள சித்திரத்தேர் விழாவும் நடைபெறுவது எம் எல்லோருக்கும் நல்லன எல்லாம் தரும் என்று நம்புவோமாக. இவ்வாலய பரிபாலனத்தை தனியாளாக நின்று மிகவும் சிறப்பான முறையில் செய்துவரும் சிவத்திரு வை.இரகுநாத முதலியார் குடும்பத்தினரை வணங்கி வாழ்த்துகின் றோம்.

நாட்டிலே சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு எல்லோருக்கும் வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கவேண்டுமென்று விநாயகப் பெருமானின் பொற்பாதங்களைப் போற்றித்துதித்து வாழ்த்துகின்றோம்.

- "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

**பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்**
**தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகரே நின்மலரடி சரணம்!

**சீரான வாழ்வு தந்து சிறக்கச்செய்வாய்!**



உலகெலாம் நிறைந்து விளங்கும் எல்லாம் வல்ல பரம் பொருளான விநாயகப் பெருமான் யாழ்.பிறவுண் வீதி நீராவியடிப்பதியிலே எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார் பெருமக்களின் அல்லல் போக்கி அருளாட்சி புரிந்து கொண்டிருக்கிறார்.

தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாதவர் விநாயகர். ஆகவே எந்தக் காரியம் தொடங்கினாலும் இவரை வணங்கியே தொடங்க வேண்டும். தொழில் சிறப்புற, கல்வியில் மேம்பட, இல்வாழ்க்கை வளம்பெற இவரது அனுக்கிரகம் அவசியமானது. அறிஞர் பலர் வாழ்ந்த இடம் நீராவியடி. இங்கு வீற்றிருக்கும் ஜெயநீராவி வீரகத்தி விநாயகருக்கு இன்று தேர்த்திருவிழா.

புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத்தேர் மீது விநாயகர் ஆரோகணித்து அருட்காட்சி தரும் அற்புத நிகழ்வு காண நாம் கொடுத்து வைத்திருக்கவேண்டும். ஜெயம் என்றாலே வெற்றி தான். ஆதலால் ஜெயவீரகத்தி விநாயகரை வழிபட்டு ஊர்கூடித் தேரிழுக்கும் அன்பர்களுக்கும் எல்லாமே வெற்றிதான்.

**"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"**

**K.V. ரவீந்திரன்**

### வாழ்த்துச்செய்தி



கோயில் இல்லா ஊரில் குடியிருத்தல் நல்லதல்ல என் பது பழங் காலம் தொட்டே தமிழ்மக்கள் கொண்டிருந்த ஒரு நம்பிக்கை யாகும். யாழ்ப்பாண நகரிலுள்ள நீராவியடி என்னும் சிற்றூரில் அங்கு வாழ்ந்த தமிழ் முன்னோர்களினால் கட்டப்பட்டு இற்றைவரை அவர்களின் மரபு வழியினரால் பேணப்பட்டு வருகிறது நீராவியடி வீரகத்தி பிள்ளையார் ஆலயம். தற்சமயம் கோயில் அறங்காவலராக நீராவியடி திரு.வை. இரகுநாதமுதலியார் பரம்பரை அறங்காவலராகச் செயற்பட்டு வருகின்றார். அவருக்குத் துணையாக அவரது துணைவியார் திருமதி இ.சாந்தாதேவி இயங்கி வருகிறார். இவர்கள் தமது காலத்தில் இக்கோயிலை மேலும் அழகுபடுத்தி கோயில் விவகாரங்களை நன்முறையில் செய்து வருகிறார்கள். இவர்களின் நற்பணிக்கு சாட்சியாக இவர்கள் தற்போது செய்து வரும் குறித்த கோயிலின் பேரும் தேர்முட்டியும் அமைந்திருப்பது எல்லோரும் காணத்தக்கதாக இருக்கிறது. இவர்களின் நன்முயற்சி இதுவரை காலமும் நடைபெற்றது போன்று தொடர்ந்தும் நடைபெற இறைவன் ஆசீர்வதிப்பாராக.

**திரு.செ.கோடீஸ்வரன்.**

### ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய தேர் வெள்ளோட்ட திருவிழா



சைவம் போற்றித் தமிழ்வளர்த்த யாழ்ப்பாணத்தில் பூலோக முதலியார் பரம்பரையினரால் கொண்டுவரப்பட்டு பூஜிக்கப்பெற்று வந்துதித்த ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகருக்கு ஊர்கூடி தேர் இழுக்கும் அற்புதத் திருவிழா.

அழகு, எளிமை, வனப்பு என அத்தனையும் கைவரப்பெற்ற நீராவியடியின் பெயரினை பறைசாற்ற எழுந்துநிற்கும் இராஜகோபுர அழகு வீரகத்தி விநாயகரின் அற்புதத்தின் அடையாளம் எனலாம். ஏனெனில் ஊருக்கும் குடிகளுக்கும் அன்பு, பாசம், சமூக உறவு என அனைத்தையும் வாரிவழங்கும் தெய்வீகம் கைவரப்பெற்றவர் வீரகத்தி விநாயகர்.

நவாலியூர் நடராஜா சிவபாலன் கற்பனையின் கலைப்படைப்பாக அவதரித்த சித்திரத்தேர் 21.06. 2013 வெள்ளோட்டம் காண்பது நீராவியடி வீரகத்தி விநாயகரின் அருட்கடாட்சம் எனவும் யாழ்.கலாசாரத்தின் கலைப்படைப்பின் பிரதிபலிப்பு எனவும் நம்பப்படுகிறது.

கோவில் கட்டுவதும் தேரோட்ட நிகழ்வு செய்து அகமகிழ்வதும் மன்னராட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே சிறப்புப் பெற்று வருகின்றது. அதன் ஆறாத் தொடர்ச்சியான வளர்ச்சியே இன்றைய தேரோட்ட நிகழ்வின் பிரதிபலிப்பாகும். அந்தவகையில் இன்றைய தருணத்தில் நினைவுகூர வேண்டியவர்கள் பூலோக முதலியார் பரம்பரையினரும் இரகுநாத முதலியார் பரம்பரையினரும் மட்டுமல்ல சகல வழிகளிலும் தேரோடு தோள் நின்ற மெய்யடியார்களுமாவர்.

**ந.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு மாவட்டம்.**

### வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வடகிழக்கு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயமானது, நீரா வியடி என்றழைக் கப்படும் இடத்திலே யாழ்.நகரப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது. திரும றைக்காடு என்றழைக்கப்படும் வேதாரணிய த்திலிருந்து கொண்டுவந்து இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட வீரகத்தி விநாயகர் ஆலயம் சிறிய கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து இந்த வருடம் மஹோற்சவம் காணும் உன்னத நிலையை அடைந்து ள்ளது. முதன் முதலாக புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத்தேரிலே ஸ்ரீ ஜெயநீராவி வீரக த்தி விநாயகப் பெருமான் சிங்காரமாக வீற்றி ருந்து அகத்திலுள்ள அகந்தையை அழித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் இந்நன்னாளில் ஆலயத்தின் வளர்ச்சிக்காகவும் யாழ்.மாந கரத்தின் வளர்ச்சிக்காகவும் அவன்தாள் பணி வதோடு நீடித்த இறைபணிக்காக ஆலய நிர் வாகத்தினருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செ.பிரணவநாதன்**
**மாநகரஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

### வாழ்த்துச் செய்தி

ஆன்மஈடேற்றத்திற்கு ஆல யங்கள் இன்றியமையாதவை ஆகும். இன் றைய கலியுகத்தில் வாழ் ந்து கொண்டிருக்கும் நாம் குறுகிய சுயநலவாழ்வியலில் ஈடுபடாது இறைவழிபாட்டு முறையில் தொண்டு, சேவை என்பவற்றைப் புறந்தள்ளாது வாழ்வதே சாலச்சிறந்ததாகும். நன் நிலமும் நீர்வளமும் ஒருங்கே அமைந்த புண்ணிய பதியான நீராவிய--டியில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகரின் திருப்பாதமே இவ்வுலகின் அறவாழ்க்கைக்கு அருமை மருந்தாகும் என்பது முன்னோர் கூற்றாகும். எனவே எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் மஹோற்சவம் மற்றும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறவேண்டி விநாயகப் பெருமானின் திருவருள் பெறுவோமாக.

**சே.செல்வராஜன்**
**நீராவியடி**

### வீரகத்தி விநாயகர் தேரில் வலம் வருகிறார்



"நற்குஞ்சரக் கன்று நண் ணிற் கலைஞானம்
கற்குஞ்சரக் கன்று காண்"

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். யானை முகத்துடைய விநாயகப் பெருமானை மன, மொழி மெய்களினால் துதிப்போமானால் அவர் திருவருள் எமக்கு கைகூடும். யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதி யில் எழுந்தி ருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநா யகப் பெருமான் இன்று புதிய சித்திரத் தேரில் வலம் வருகிறார். மஹோற்சவத்தின் சிகரமாகத் திகழும் தேர்த் திருவிழாவான இன்று விநாயகப் பெருமான் அழகிய தேரில் எழுந்தருளும் கண்கொள்ளாக்காட்சியை அனைவரும் கண்டு அகமகிழலாம்.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்ந்து மிகுந்துவரும்
வெள்ளைக்கொம்பன் விநாயகனைத் தொழ துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே"

**ஸ்ரீவத்ஸ ந.பத்மநாப சர்மா**
**70, பிறவுண்றோட்,**
**யாழ்ப்பாணம்.**

### வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம்நீராவியடிஅருள் மிகுஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் எழுந்தருளிய இடம் கிழக்கே பிறவுண் வீதியையும் மேற்கே நீர் வாவி திருக்குளத்தையும் வடக்கே நீராவியடி வீதியையும் தெற்கே அருள்விநாயகர் தேரோடும் வீதியையும் காணலாம். நீர்வாவி வீரகத்தி விநாயகர் பிற்காலத்தில் நீராவியடி பிள்ளையாராக மாற்றம் பெற்றதை அடியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன். இவ்வீரகத்தி விநாயகர் இதுவரை காலமும் அலங்கார மூர்த்தியாக நின்று அருள்பாலித்து இன்று மஹோற்சவ மூர்த்தியாக புதிய தேரில் வீதிவலம் வரப்போகின்றார். அதையிட்டு வெளியீடு செய்யும் மலரு க்கு ஆசியுரை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு கோவில் தர்மகர்த்தா சபையினருக்கும் அவ்வூர் மக்களுக்கும் வீரகத்தி விநாயகரின் பக்தையாகவும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் என்ற வகையிலும் முதற்கண் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவர் விநாய கப் பெருமான். ஆலயங்களில் சரி, வீடுகளில் சரி எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் வல்ல வினைகளைப் போக்கி நற்பேறு கிடைக்க ஆசீர்வாதம் செய்யும் விநாயகரை வணங்கி செய்யும் காரியங்கள் எல்லாம் தடையின்றி நடைபெறும். இது எங்களுடைய ஆன்றோர் வாக்கு. நாகரிகங்கள்தான் எவ்வாறு முன்னேறினாலும் விநாய கரை வணங்கி னால் தான் எமது முன்னேற்றம் என்பதை யாரும் மறப்பதில்லை. சிங்கள மக்கள்கூட "கணதெய்யோ" என்று வணங்குவதைக் காணலாம். எல்லா இந்துக் களின் வீட்டு சுவாமி அறையிலும் முதலாவது படமாக அமைவது விநாய கருடைய படம்தான். தென்கிழக்காசியா விலும் விநாயக வழிபாடானது சிறப்பாக அமைந்திருப் பதனைக் காண லாம். நாவலர் பெருமான் வளர்த்த தெய்வீக சூழல் பெற்ற வண்ணார் பண்ணைச்சூழலில் அமைந்துள்ள நீராவியடிப்பிள்ளையார் திருத்தலத்திற்குத் திருத்தல வரலாறு உண்டு. அதனால்தான் அங்கு எழுந்த ருளியிருக்கும் விக்கினேஸ்வர பெருமான் மக்களது விக்கின ங்கள்ள நீக்கும் தெய்வமாக அருள்பாலித்துக்கொண்டிருக்கிறார்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா**
**மாநகரமுதல்வர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**


ஊடக அனுசரணை
Kuddythamby Family
Insel Str, Basel,Switzerland
kuddythamby family@gmail.com
Kuddythamby Family@yahoo.com
T.P.0778872828
0713833383
(3059)


### வாழ்த்துச்செய்தி

சிவபூமியாம் ஈழத்திருநாட் டில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து சைவசமயம் வேரூன்றி இருந்தது என்பதற்கு அழியாத சாட்சியங்களாக திரும்பிய திசைதோறும் திருக்கோயில்கள் அருள்மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன. அந்தவ கையில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு ஒல்லா ந்தர் ஆட்சியில் திறைசேரியின் தலைவராக இருந்த பூலோக முதலியாரால் யாழ்ப்பாணத்தில் நீராவி எனப்பெறும் நீராவியடிப் பிரதேசத்தில் ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம் நிறுவப்பெற்றது. இக்கோ யிலில் இதுவரை காலமும் அலங்காரத் திருவிழாக் களே இடம்பெற்றன. இவ்வாண்டு கொடியேற்றமும் இரதோற்சவமும் உள்ளடங்கிய மஹோற்சவப் பெரு விழா இடம்பெறுகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

திருமறைக்காடு என்றழைக்கப்படும் வேதாரண்ய திருத்தலத்தில் இருந்து பூலோக முதலியாரின் தகப்பனார் பூதர் என்பவரால் மூலவிக்கிரகமாக விளங்கும் விநாயகர் சிலை எடுத்துவரப்பட்டு இவ்விடத்தில் சிறிய கொட்டிலில் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் பூலோக முதலியாரால் சிறிய கற்கோயிலாக கட்டப்பெற்றது. படிப்படியாக வளர்ச்சியடைந்த இக்கோயில் இன்று பஞ்சதள இராஜகோபுரம் கொண்டமையைப் பெற்று நீராவியடிப் பிரதேசத்திற்கே பெருமை சேர்ப்பதாக விளங்குகின்றது.

அரிய பணிகளை மேற்கொண்ட அறங்காவலரான திரு: இரகுநாதமுதலியார் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இவ்வுலகில் துன்பங்கள் நீங்கி அனைவரும் இன்பமாக வாழ எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி நந்தினி சண்முகலிங்கம்**
**நீராவியடி.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற தெரிவுக்குழிக்குள் வீழ்ந்துவிடுமா த.தே.கூட்டமைப்பு?

மாயமான் வேட்டை போலாகி விட்டது 13-வது திருத்தச்சட்டத்துள் தீர்வினைத் தேடுவது. பூச்சியத்துள் புள்ளியைத் தேடமுடியாது. இது நிரந்தரமான அரசியல் தீர்விற்கான ஆரம்பப் புள்ளியுமல்ல, முற்றுப் புள்ளியுமல்ல என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுவதை, இந்த வாரம் மந்திரிசபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களே உறுதிப்படுத்துகின்றன.

இதைவிட்டால், வேறுவழியென்ன? என்று அங்கலாய்ப்பவர்கள், ஒன்றுமே இல்லாத ஒன்றிற்குள் எதைத் தேடுகிறார்கள் என்று யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குமார வடிவேல் குருபரன் கேள்வி எழுப்புவதில் நியாயம் உண்டு. தமிழ் தேசத்தின் இறைமையை அடிப்படையாகக் கொள்ளாத எந்தத் தீர்வும், நல்லிணக்கத்தை உருவாக்காது என்பதுதான் யதார்த்த உண்மை.

அதேவேளை, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வென்று இந்தியாவால் முன்வைக்கப்பட்ட மாகாணசபை முறைமை, அது தேவைப்படாத, சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஏனைய மாகாணங்களுக்கு ஏன் விஸ்தரிக்கப்பட்டது என்கின்ற கேள்வியை அன்றைய காலகட்டத்தில் எவரும் முன்வைக்கவில்லை.

வட-கிழக்கில் பூர்வீகமாக வாழும் தமிழ் பேசும் மக்களுக்கென்றொரு தீர்வினை தனியாக வழங்க சிங்கள தேசம் விரும்பவில்லை என்பதையே இந்நகர்வு சுட்டிக் காட்டுகிறது.

இப்போதும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே தீர்வு குறித்தான எதுவித உடன்பாடும் கிடையாது என்பதோடு, மஹிந்த-சம்பந்தன் ஒப்பந்தம் உருவாகும் சாத்தியம் துளியளவும் இல்லை என்று அரச தரப்பினர் தெளிவாகக் கூறுகின்றார்கள். ஒரு வருடம் கூட்டமைப்போடு பேசிய பின்பும், அவர்களின் பழைய நிலைப்பாடு மாறவில்லை.

தற்போது முனைப்புப் பெற்றுள்ள, 13-வது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது அதில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்கின்ற ஆரவாரங்களின் பின்னணி குறித்துப் பார்த்தால், அரசின் தந்திரங்கள் புரியும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்தபோது பேசப்படாத 13-வது திருத்தச் சட்டம் குறித்தான விவகாரங்கள் இப்போது ஏன் பேசப்படுகின்றன?

அண்மைக்காலமாக அதிகமாக விவாதிக்கப்பட்ட காணி, காவல்துறை மற்றும் நிதி விடயங்களைத் தவிர்த்து, இரண்டு மாகாணங்கள் இணைய முடியுமா? பெரும்பான்மையான மாகாண சபைகள் எடுக்கும் தீர்மானங்கள் மாகாணசபைச் சட்டத்தில் பொதுவான மாற்றங்களைக் கொண்டுவருமா? என்பது போன்ற விவகாரங்களில் ஏன் அரசு அக்கறை கொள்கிறது என்கிற சந்தேகமும் எழுகிறது.

திவி நெகும சட்டமூலத்தை அரசு சமர்ப்பித்தபோது, உருவான அரசியல் யாப்புச் சிக்கல், எஞ்சி இருக்கும் சொற்ப அதிகாரங்களை உருவி எடுக்கும் அவசியத்தை அரசிற்கு ஏற்படுத்தியதா? அல்லது 13- இல் கை வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குள் இழுப்பதற்கு இவ்வாறான வியூகத்தை அரசு பிரயோகிக்கிறதா? என்பதை உன்னிப்பாக நோக்கவேண்டும்.

கடந்தவருடம் திவிநெகும சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அரசின் நகர்விற்கு முரணான வகையில் அதற்கு எதிரான தீர்ப்பினை அன்றைய பிரதம நீதிபதி சிராணி பண்டாரநாயக்க வழங்கினார்.

தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம், சகல மாகாணசபைகளின் ஏகோபித்த ஒப்புதல் பெறப்பட்டபின்பே திவி நெகும சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் அவர் கொடுத்த தீர்ப்பு. அதன் எதிர்வினையாக சிராணியின் பதவி பறிக்கப்பட்டு, அந்த விவகாரம் பெரும் சட்டச் சிக்கலையும், சர்வதேச கண்டனத்தையும் எதிர்கொண்டது.

அதாவது, நிறைவேற்று அதிகார வல்லமை கொண்ட அதிபர் முறைமைக்கும், மாகாணசபை சட்டத்திற்கும் இடையே உள்ள முரண்நிலையை நீக்க வேண்டுமாயின், அதிபரின் அதிகாரத்திற்கு இடையூறாகவுள்ள மாகாணசபையின் சில சரத்துக்களை இல்லாதொழிக்க வேண்டும்.

ஆகவே, இது குறித்து கடந்த 6ஆம் திகதி, வெளிநாட்டமைச்சர் ஜி.எல் பீரிஸினால் மந்திரி சபையில் முன்வைக்கப்பட்ட 154 ஜி மற்றும் 154 எச் சரத்துக்களை நீக்குவது தொடர்பான விடயம், நாடாளுமன்றில் முக்கிய பிரேரணையாக எடுத்துக் கொள்ளப்படும் என நம்பலாம்.

மந்திரி சபையில் இவ்விவகாரம் உரையாடப்பட்ட போது, ராஜித சேனாரட்ன, டியூ. குணசேகர, திஸ்ஸ விதாரண போன்றோர் இதற்கு தமது கடுமையான எதிர்ப்பினை பதிவு செய்ததாகக் கூறப்படுகிறது. ஆனாலும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவு ஜி.எல்.பீரிஸின் முயற்சிக்கு பரிபூரணமாக உண்டு.

அடுத்ததாக, 13-வது திருத்தச் சட்டம் தொடர்பாக தென்னிலங்கையில் எழுந்துள்ள போர்ப்பிரகடனத்திற்கும், இரண்டு வருடமாகக் காத்திருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கும் இடையே ஏதாவது ஒட்டுறவு இருக்குமா என்பது குறித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்றத் தெரிவக்குழுவிற்கு இழுத்துவருவதற்காக, ஆட்சியாளர்கள் அரங்கேற்றும் நாடகமா, இந்த 13-வது திருத்தச் சட்ட விவகாரம் என்கின்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவும், நீர்ப்பாசன அமைச்சருமாகிய நிமால் சிறிபால டி. சில்வா தென்னிலங்கை ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு அண்மையில் வழங்கிய செவ்வி, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு கலந்து கொண்டால், 13+, 13- குறித்துப் பேசலாம் என்று கூறியுள்ளார். சர்வதேசத்திற்கு ஜனாதிபதி உறுதியளித்த 13+ பற்றி அந்த ஊடகம் வினவிய போது, அது ஜனாதிபதி முன்வைத்த செனட்சபையென்றும் அது குறித்து விவாதிக்க தெரிவுக்குழுவிற்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனையோரும் வரவேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபால, அவ்வாறான பொருத்தமான விவாதக் களத்தில் பங்கு கொள்ளாமல் அரசைக் குற்றஞ்சாட்டுவது தவறு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்குள் வராமல், வெளியில் இருந்தவாறு, கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ எதையும் கேட்க முடியாது என்று மிகவும் அழுத்தம் திருத்தமாக அமைச்சர் கூறுகின்றார்.

அதேவேளை, [illegible] விருக்கும் 13வது திருத்தச் சட்ட மாற்றங்கள் குறித்துப் பேசும்போது, இந்திய அரசு அதனை எதிர்க்காது என்று கூறுவதற்கான தமது தரப்பு நியாயப்பாட்டினையும் அவர், முன்வைக்கின்றார்.

பெரும்பான்மையான மாநிலங்கள் அங்கீகரிக்கும் விடயத்தை, அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருப்பதை, தனது வாதத்திற்கான கருவியாக அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா பயன்படுத்தியிருக்கிறார்.

இம்மாதம் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்ட, ரவிஷங்கர் பிரசாத் தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியின் ராஜ்யசபா உறுப்பினர்களோடு இலங்கை ஜனாதிபதி பேசும்போது, இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு, நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாகவே சாத்தியமாகும் என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் அதே கருத்தையே ரவிஷங்கரும் ஒப்புவித்தார். அரசியல் தீர்வு வழங்கும் மந்திரக்கோல் இந்தியாவிடம் இல்லையென்ற அவர், வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல்வாதிகள், உறுதியான தீர்வொன்றினை அடைய வேண்டுமாயின் உள்நாட்டு அரசியல் செயல்முறை ஒன்றுக்குள் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

அதாவது, இலங்கை அரசின் நாடாளுமன்ற தெரிவுக்குழு அரங்கமே, தீர்வொன்றினை எட்டுவதற்கான வெளி என்பதை, இந்தியாவின் முக்கிய எதிர்கட்சியும் வலியுறுத்துகிறது என்று கொள்ளலாம்.

இந்நிலையில், அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சதந்திர முன்னணி, 13-வது திருத்தச் சட்டத்தை அகற்றக் கோரி கையெழுத்து வேட்டையில் இறங்கிய அதேவேளை, நாடாளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்றையும் சம்பிக்க ரணவக்கவின் ஜாதிக ஹெலஉறுமய முன்வைத்துள்ளது.

இவ்வாறான அழுத்தங்கள் இந்தியாவை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓடவைக்கும் என்று அரசு கணக்குப்போடுகிறது.



ஆனாலும், நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்குள் கூட்டமைப்பை இணைப்பதற்கே, இந்த அழுத்தப்பொறி, இலங்கை அரசால் விரிக்கப்படுகிறது என்பதை இந்தியா உணர்ந்துகொண்டால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சேர்ந்து கொள்ளுங்கள் என்கின்ற அறிவுரையை கூட்டமைப்பிற்கு இந்தியா வழங்கலாம். பா.ஜ.க. குழுவின் பார்வையும் இப்படித்தான் இருக்கிறது.

அடுத்ததாக, கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை அரசு நிறைவேற்றத் துடிக்கும் நாடாளுமன்றத் தெரிவக்குழு நாடகத்திற்கும், ஐ.நா.மனித உரிமைப் பேரவை தீர்மானங்களிற்கும் இடையில் ஏதாவது தொடர்பு உண்டா என்பது குறித்துப் பார்க்கவேண்டும்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு என்கின்ற அரசியல் தீர்வு விவாதமேடைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமுகமளித்தால், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானங்கள் வலுவிழந்து போகுமென்று இலங்கை அரசு கணிப்பிடுகிறது.

இரண்டு தடவைகள் அமெரிக்கா தீர்மானங்களைக் கொண்டு வந்தாலும் தனது முயற்சியை இலங்கை அரசு கைவிடவில்லை. அதேவேளை செப்ரெம்பரில் வடமாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென்கிற அழுத்தத்தையும் மேற்குலகம் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், கூட்டமைப்பானது தனித்துவமான தமிழர் தரப்பு என்கிற அங்கீகாரம் பெறுவதைத் தவிர்க்கவும், சகல கட்சிகளும் ஒன்றுகூடி தீர்வுத் தேர் இழுக்க முயல்கிறோம் என்று உலகிற்கு காட்டவும், இதனூடாக இன அழிப்பு விசாரணைகளை திசைதிருப்பவும், ஐ.நா.வில் இனிவரும் தீர்மானங்கள் தீர்வுப் பேச்சுவார்த்தைகளை குழப்பும் என்று நியாயப்படுத்துவம், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது அவசியமென்று அரசு கருதுகிறது.

திவி நெகும எதிர்கொண்ட சட்டச் சிக்கல், வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பிற்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான வழக்குகள், வடக்கின் தேர்தலை நடாத்துமாறு ஐ.நா. தீர்மானம் கொடுத்த அழுத்தம் என்பவற்றை எதிர்கொள்ளும் இலங்கை அரசு, இதிலிருந்து விடுபட கையிலெடுத்துள்ள விவகாரமே இந்த 13வது திருத்தச் சட்ட அழிப்பு நாடகம்.

13 இல் ஒன்றுமில்லையென்றால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குள் வருவதை தவிர கூட்டமைப்பிற்கு வேறு வழியில்லை. என்பதைக்காட்ட அரச முயற்சிக்கிறது.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை, 13 வலுவிழந்தாலும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலுள்ள தமது பிராந்திய நலனைப் பாதுகாக்கும் ஏனைய விடயங்கள் மாற்றப்படாமல் இருக்கும் என்கின்ற நிம்மதி உண்டு.

ஆகவே, அரசின் துரிதமான நகர்வுகள் 13-வது திருத்தச் சட்டம் தொடர்பாக, இதுவரை மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? அல்லது அரசின் நிகழ்ச்சி நிரலிற்கேற்ப கூட்டமைப்பு உள்வாங்கப்பட்டு, நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் அந்த விவாதம் தொடருமா என்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி எடுக்கும் நிலைப்பாட்டில் தங்கியுள்ளது. நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இணைந்தால், இனப் பிரச்சினை குறித்தான சர்வதேச கரிசனை குறைந்துபோகும். இந்தியாவின் வகிபாகம் நீடிக்கும். ஆனால், தீர்வு வராது.

-இதயச்சந்தரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரங்களை இரத்து செய்யவேண்டிய காலம்

## கோமன் தயாசிறி

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரங்களை இரத்து செய்யவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக, பிரபல சட்டத்தரணி கோமன் தயாசிறி தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடமாகாணத்துக்கு அதிகாரங்கள் வழங்கப்பட கூடாது என்ற அடிப்படையில் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட விடயங்களை இரத்து செய்ய தற்போது செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

ஆனால், தென்னிலங்கையில் பொலிஸாரின் அதிகாரங்களை மீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தமுடியாதுள்ளது. அவர்களின் செயற்பாடுகள் ஆபத்தானதாக இருக்கிறது.

எனவே, பொலிஸ் அதிகாரங்களை இரத்து செய்ய வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஓய்வூதிய நம்பிக்கை அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை அங்கத்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரசேத செயலாளர் பிரிவுகளில் இந்த அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்திற்கு அங்கத்தவர்களைச் சேர்த்தல், உரிய கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுத்தல், தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சிறப்பாக செயற்படுத்துதல் போன்ற பல் வேறு செயற்பாடுகளில் கோப்பாய் பிர தேச செயலாளர் பிரிவின் , கீழ் உள்ள அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்த நிதியத்தில் தங்களது சிறப்பான செயற்பாடுகளை வழங்கிவருகின்ற 7 அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களுக்கு நினைவுப்பரிசும் சான்றிதழ்களும் இதன்போது வழக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தலைவர் சி.சத்திவேல், கோப்பாய் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் இ.கிருஸ்ணதாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# 10 கோடி பெறுமதியான போதை மருந்துகள் விற்கப்படுகின்றன

(கொழும்பு)

நாட்டில் நாள்தோறும் 10 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதாக தெரியவருகின்றது.

பத்து கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் இவ்வாறு விநியோகம் செய்யப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

போதைப் பொருள் வர்த்தக்கர்களிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் குறித்த விடயம் அம்பலமாகியுள்ளது. வலி நிவாரணத்திற்காக உற்பத்தி செய்யப்படும் மருந்து மாத்திரைகளை போதைப் பொருளுடன் கலப்படம் செய்து போதைப் பொருள் வியாபாரத்தை விஸ்தரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெரோயின் போதைப் பொருளுடன் கலப்படம் செய்து வர்த்தகர்கள் பாரியளவில் இலாபமீட்டி வருவதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆப்கானிஸ்தான்,பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இந்த போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படு கிறது. (அ-2)

# வட.பொ.சே. ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக செல்வி உமாதங்கவேல் பதவியேற்றுள்ளார்.

இவரது உத்தியோகபூர்வ பதவியேற்பு வைபவம் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

வடமாகாண சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை திணைக்கள ஆணையாளராக பணியாற்றிய இவர், தற்போது வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளராக பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)




- *1593* -குரொவெசியர்கள் சிசாக் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் துருக்கியர்களை வென்றனர்.
- *1633* - அண்டத்தின் மையம் பூமி அல்ல, சூரியன் என்ற தனது அறிவியல் கொள்கையை கலிலியோகலிலி உரோம் அரசுப்படைகளின் வற்புறுத்தலின் பேரில் திரும்பப் பெற்றுக் கொண்டார்.
- *1658*-போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.
- *1783*-ஐஸ்லாந்தின் லாக்கி எரிமலையிலிருந்து வெளியேறிய நச்சு வளி பிரான்சின் ல ஹாவ்ரா நகரைத் தாக்கியது.
- *1812*- முதலாம் நெப்போலியன் ரஷ்யாவின் மீது போரை அறிவித்து முற்றுகையிட்டான்.
- *1815*-நெப்போலியன் பொனபார்ட் இரண்டாம் தடவையாக பதவியிழந்தான். 4 வயதான இரண்டாம் நெப்போலியன் இரண்டு வாரங்களுக்கு ஆட்சியில் அமர்ந்தான்.
- *1825*-பிரித்தானிய நாடாளுமன்றம் நிலமானிய முறையை நீககியது.
- *1866*-ஆஸ்திரிய-புருசிய போரில் ஆஸ்திரிய இராணுவம் இத்தாலிய இராணுவத்தைத் தோற்கடித்தது.
- *1898*-*ஸ்பானிய-அமெரிக்கப் போர்: அமெரிக்கக் கடற்படையினர் கியூபாவில் தரையிறங்கினர்.*
- *1911*- ஐந்தாம் ஜோர்ஜ் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினான்.
- *1940*-இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் கட்டாயமாக நாசி ஜேரமனியுடன் அமைதி உடன்பாட்டுக்கு ஒப்புக் கொண்டது.
- *1941*- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படையினர் சோவியத் ஒன்றியத்தை முற்றுகையிட்டனர்.
- *1941*-சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான லித்துவேனியாவின் விடுதலைப் போர் ஆரம்பமானது.
- *1976*-கனடாவில் மரண தண்டனை வழங்குவது நிறுத்தப்பட்டது.
- *1978*-புளுட்டோவின் சாரண் என்ற துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- *1986*-மெக்சிகோவில் இடம்பெற்ற உலகக் கோப்பை காற்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜெண்டீனிய வீரர் மரடோனா நூற்றாண்டுக்கான கோலைப் போட்டார்.


*பிறப்புகள்*

- *1962*- கிளைட் ட்ரெக்ஸ்லர, முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்
- *1964*- டான் பிரவுன், ஆங்கில எழுத்தாளர்
- *1974*- விஜய், தென்னிந்திய நடிகர்

*இறபபுகள்*

- *1990*-ஈலியா பிராங்க, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1908)

## *ஸ்பானிய -அமெரிக்கப் போர்*



பத்தொன்பதாம் நூற்றாண்டில், அமெரிக்க ஐக்கிய நாடுகள், வட அமெரிக்க கண்டத்தில் பலம்பொருந்திய சக்தியாக உருக்கொண்டது. ஐரோப்பிய நாடுகளைப் போல தாங்களும் காலனிகளைக் கைப்பற்றி, தனிப் பேரரசை உருவாக்க அமெரிக்கர்கள் விரும்பினர். கரிபியன் கடற்பகுதியில் உள்ள கியூபா தீவு அங்கு விடுதலை வேண்டி கலகங்கள் வெடித்த வண்ணம் இருந்தன. ஸ்பெயின் அரசாங்கம் அக்கலகங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கி வந்தது. *1895* இல் ஹோசே மார்ட்டி என்பவரின் தலைமையில், புதிய கியூப விடுதலைப் போர் மூண்டபோது ஸ்பானிய அரசு கொடூர அடக்குமுறைகளை கையாண்டதனால் அவற்றை உடனே நிறுத்தாவிட்டால், கியூ பாவை சுதந்திர நாடாக அங்கீகரிக்கப் போவதாக ஸ்பெயின் அரசாங்கத்தை அமெரிக்கா மிரட்டியது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அமைதிப் பேச்சுவார்த் தைகள் முறிந்து, ஏப்ரல் *1898* இல் இரு நாடுகளும் போர் தொடுத்தன. பசுபிக் போர், கரீபியன் போர் என இரு நடவடிக்கைகளாக இடம்பெற்ற இப்போரின் போது பசுபிக் போரில் அமெரிக்க கடல் வழியாக ஸ்பெயின் தலைநகர் மணிலாவை கைப்பற்றியது. தொடர்ந்து கரீபியன் போர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது அமெரிக்காவிடம் போர் நிறுத்தக் கோரியதைத் தொடர்ந்து அமைதி ஒப்பந்தத்தின்படி கியூபா, பிலிப்பைன்ஸ், புவேர்ட்டோ ரிக்கோ, குவாம், குவாண்டானமோ ஆகிய பிரதேசங்கள் ஸ்பெய்னிடமிருந்துஅமெரிக்காவிற்கு கைமாறின. இதன்மூலம் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற் சந்தை 28 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

**தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு, சமூக சேவை அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ள நலிவடைந்த குழுமமாகவும் தொழில் வாய்ப்பின்றியும் இருக்கின்ற மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் தன்னிறைவுத் தன்மையை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வடமாகாணத்திற்கான மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற் சந்தை எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது**

எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற் சந்தையில் வடமாகாணத்திலுள்ள தொழில் தருநர்களும் கலந்து கொண்டு தொழிற் சந்தையில் பங்கெடுக்கின்ற மாற்றுத்திறனாளிகளில் பொருத்தமான வரை இனங்கண்டு தொழில் வாய்ப்பை வழங்க முடியும்.

இதன் மூலம் இவர்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதுடன் மேற்படி தொழில்தருநர்களின் சமூக கடமையை நிறைவேற்றுவதற்கு சிறந்த சந்தர்ப்பமாகவும் அமையும்.

எனவே தொழில்தருநர்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இம் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற் சந்தையில் பங்கெடுக்க விரும்புகின்ற வடமாகாணத்தில் தொழில் மற்றும் வியாபார நிறுவணங்களை நடத்துகின்ற தொழில் தருநர்கள் சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகத்துடன் நேரிலோ அல்லது அலுவலக தொலைபேசி இலக்கமான 021222 6333 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமோப தமக்குரிய இடத்தை பதிவு செய்து கொள்ளுமாறு வட மாகாண பிரதி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-5)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டத்தின் விசேட ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்றிட்டமான இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை 2013ஆம் ஆண்டிற்கான ஆரம்பக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது. ஏனைய வகுப்புக்கள் விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ளன.

இதற்கான வளவாளர்களாக, யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணாகிரிநாதன், (கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இரவீந்திரன், (திட்டமிடல்) தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அருந்தாகரன், லலீசன் (கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), அதிபர் கணேஸ்வரன் மற்றும் துறைசார் வளவாளர்கள் தயாளன், தவசேகர், தமிழிந்திரன் ஆகியோர் செயற்படவுள்ளனர். மேலும் பரீட்சை மதிப்பீட்டாளர்களும் கலந்து கொள்வர். இக்கருத்தரங்கில் அனைத்து ஆசிரியர்களும் மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கலந்து பயன் பெறுமாறு யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம் கோரியுள்ளது.

இடநெருக்கடியை தவிர்க்கவும், அச்சடிக்கப்பட்ட குறிப்புகளை பெற்றுக் கொள்ளவும், 0770540061 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு ஆசிரியர் வட்டம் கோரியுள்ளது. (அ)

## மீனவர்களை அவதானமாக செயற்படுமாறு எச்சரிக்கை

கடும் காற்று காரணமாக மீனவர்கள் மற்றும் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்கும் படி அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரில் இருந்து பொத்துவில் ஊடாக காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கும் கடற்பிரதேச மக்களுக்குமே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கடற் பிரதேசங்களில் மணித்தியாலத்திற்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என அந் நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிளுக்கும் காலி, மாத்தறை, புத்தளம், குருநாகல் மாவட்டங்களுக்கும் பலத்த காற்றுடன் கூடிய காலநிலை நிலவப்பெறும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. (அ-2)

## நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் ஓய்வு நிலை உச்சநீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்புகளான **இந்து சமய சிந்தனைகள் (தமிழ்), (Some Thought on Hinduism)** (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்களது வெளியீடும் சிவத் தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையும் இன்று சனிக்கிழமை நல்லூர் கோயில் வீதியில் உள்ள இந்துமா மன்ற யாழ். பிராந்திய பணிமனையில் நடைபெறவுள்ளன.

அகில இலங்கை இந்துமா மன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் மனித நேய மாமணி வி.கைலாசபிள்ளை தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதுடன் இந்துமா மன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் வரவேற்புரை ஆற்றுவார். அகில இலங்கை இந்துமா மன்ற உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் நூல்களின் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

இதனைத் தொடர்ந்து நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் எனும் பொருளில் நிகழ்த்தும் நினைவுப் பேருரை இடம் பெறும்.

இந்த நிகழ்வின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனிகளும் திருமுறை ஓதல் நடத்திவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலயங்களுக்குபன்னிருதிருமுறைத் தொகுப்பு நூல்களும் அகில இலங்கை இந்துமா மன்றத்தினால் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. (அ)

## பன்னிரு திருமுறை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பன்னிரு திருமுறை ஓதும் ஆலயங்களுக்கு அகில இலங்கை இந்துமா மன்றம் பன்னிரு திருமுறை தொகுப்பின் பிரதிகளை அன்பளிப்பு செய்யவுள்ளது.

நல்லூர் கோவில் வீதியிலிருக்கும் யாழ்.இந்துமா மன்ற பணிமனையில் இருக்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடக்கும் வைபவத்தில் இந்த அன்பளிப்பு வைபவம் நடைபெறவுள்ளது.

பன்னிரு திருமுறை தொகுப்பை பெற விரும்பும் ஆலயங்கள் யாழ். இந்துமா மன்ற பணிமனையில் இருக்கும் இந்து ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் கலாநிதி ஆறு. திருமுருகனுடன் கீழுள்ள தொலைபேசி இலக்கமாகிய 021 222 1075 அல்லது 077 625 8511 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## வாஸ் குணவர்த்தன பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது

### காரணம் கோருகிறார் அமரதுங்க எம்.பி.

(கொழும்பு)

பிரதிபொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன ஏன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் என எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற போது குறித்த பிரதி பொலிஸ்மா அதிபரின் புதல்வரும் பிரசன்னமாகியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவரைக் கைது செய்யவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதிபொலிஸ்மாஅதிபரின் புதல்வரைக் கைது செய்ய பொலிஸ் அவரது வீட்டுக்கு சென்றதாகவும் அப்போது அவரது மனைவி சகல உண்மைகளையும் அம்பலப்படுத்துவேன் என எச்சரிக்கை விடுத்ததனைத் தொடர்ந்து அவர்கள் வெறும் கையுடன் திரும்பியதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்ய சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## கும்பாபிஷேகம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலய புனராவர்த்தன பிரிதிஷ்டா நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி முதல் உள்ள சுப வேளையில் இடம் பெறவுள்ளது.

முன்னதாக எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் அம்பாளுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.


கும்பாபிஷேக கிரியைகளை மானிப்பாய் மருதடி விநாய கர் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீஜெயக்குமாரக் குருக்கள் மேற்கொண்டுவருகிறார். (அ-3-23)


## அலங்கார உற்சவம்

(கைதடி)

கைதடி மேற்கு உதயநகர் அருள்மிகு அண்ணமார் ஆலயத்தின் வருடாந்த அல ங்கார உற்சவம் இம் மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கி ழமை முதல் ஜூலை மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.


கந்தையா சிவகுருநாதர் பூசாரியார் தலைமையில் 12 நாட்களும் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் அண்ணமார் அடியார்களைக்கலந்து கொள்ளு மாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ-3)






பொன்.பாலகுமார் எழுதிய அபிவிருத்தி வங்கியியல் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா யாழ். தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி நூலை வெளியிட்டு வைக்க, இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டை முகாமையாளர் கே.பவனேந்திரராஜா பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தான இரதோற்சவ சிறப்பு மலர் – 22.06.2013

## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

கந்தன் வடம்பிடிக்க வாரீர் அவன்திருவருளைப் பெறுவீர்!

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தின் சகல செல்வபோகங்களும் கொழிக்கும் நவாலி அட்டகிரி கந்தனாம் சண்முகப் பெருமான் தேரேறி அனைத்து பக்த அடியார்களுக்கும் வேண்டும் வரங்களை அள்ளி வழங்கும் தருணம் அனைத்து அடியவர்களும் வருகை தந்து எம் பெருமானின் வடம்பிடித்து உங்கள் அனைத்து மனத்துன்பங்களையும் நீக்கி மன நிம்மதியாகவும் சகல செல்வபோகங்களையும் பெற்று நல்லவண்ணம் வாழ எனது வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தேவஸ்தான பிரதமகுரு**
**, சிவஶ்ரீ கா. துரைச்சாமி குருக்கள்,**
**நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்.**

**மலர் அமைப்பு: க.குகன்**

## தேர் உணர்த்தும் தத்துவம்

தேர்த்திருவிழா நடைபெறவிருக்கும் இந்த நன்னாளில் தேர் உணர்த்தும் தத்துவம் என்ன என்பதைப் பற்றி சிறிது சிந்திப்போம். உலகத்தையே தேராகக் கொண்டு இறைவன் வலம் வருகின்றான் என்பதையே தேர்த்திருவிழா விளக்குகின்றது.

தேரில் காணப்படும் நான்கு குதிரைகளும் நான்கு வேதங்களைக் குறிப்பிடுகின்றன. பிரம்மதேவனே இத்தேருக்குச் சாரதியாக விளங்குகின்றான். பூமியாகிய இந்தத் தேருக்குச் சூரிய சந்திரர் சக்கரங்களாக அமைந்துள்ளனர்.

சூரியன் அசுத்தத்தைப் போக்குவான். சந்திரன் மகிழ்ச்சியை அளிப்பான். ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களையும் அழிப்பதையே நோக்காகக் கொண்டு இறைவன் தேரூந்து வருகின்றான் என்று பல நூல்கள் தேர்த்திருவிழாவின் தத்துவத்தினை எடுத்து இயம்புகின்றன.

## முத்தமிழ் வேந்தன்



சிங்கார வேலன்
சிவசக்தி பாலன்
மங்காத தீபம்
மாமலையின் ஜோதி
தத்துவம் புகட்டிடும்
உத்தம ரூபன்
நற்றமிழ் தந்திடும்
முத்தமிழ் வேந்தன்

ஓம் சரவண பவ!!!

## வடம்பிடிக்க வாரீர் சண்முகப்பெருமானாம் கந்தன் திருவருளைப் பெறுவீர்!

சிவபூமியாம் ஈழமணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் சகல செல்வபோகங்களையும் கொண்ட இயற்கை வளம் கொழிப்பதுமாகிய நவாலியிலே பச்சைப்பசேல் என இருக்கும் நெல் வயல்களின் மத்தியிலே வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் அட்டகிரியாம் சண்முகப்பெருமானாம் எம் கந்தப்பெருமானின் பரிபூரணத்துவமான திருவருள் கிடைக்கும் நாளாம் தேர்த்திருவிழா எம் பெருமான் தேரில் பவனி வந்து அனைத்து அடியவர்களின் துன்பங்களை நீக்கி அனைத்து செல்வபோகங்களையும் வழங்கி திருவருள் பாலிக்கின்ற தருணம் அடியவர்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து எம் பெருமானின் வடம்பிடித்து கந்தன் திருவருளைப் பெற்று நல்லவண்ணம் வாழ எம்பெருமானைப் பிரார்த்தித்து எனது ஆசீர்வாதங்களையும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மஹோற்சவ பிரதம குரு**
**சிவஶ்ரீ இ.நகுலேஸ்வரக்குருக்கள்**
**ஶ்ரீ வித்யா உபாசகர், பிரதம குரு, கைதடி கற்பக விநாயகர் தேவஸ்தானம்,**
**ஏ-9 கண்டிவீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
**ஶ்ரீராஜராஜேஸ்வரி பழைய அம்மன், நீர்வேலி.**

## வேல் கொண்டு தீமைகளை வதஞ்செய்ய வாராய் முருகா

நவாலி அட்டகிரியில் அமர்ந்து அடியார்களுக்கு அருள் வழங்கும் கந்தப்பெருமானுக்கு இன்று இரதோற்சவமாகும். இந்த நன்னாளில் கந்தப்பெருமானின் அருட்கடாட்சம் எம் அனைவருக்கும் கிடைக்கப்பெற வேண்டி இருகரம் கூப்பி வணங்குகின்றோம்.

இரதோற்சவம் என்பது அழித்தலைக் குறிப்பதாகும். தீமைகளை அழித்து நன்மைகளைத் தர ஈசன் மைந்தன் இன்று தேரேறி வருகின்றான். அவன் வலம் வரும் வீதியில் கூடி வடம்பிடிப்போம். அவன் அருள் பெறுவோம் என அனைவரையும் அழைக்கின்றோம்.

இன்றைய இத்திருநாளில் உலகிலுள்ள உயிரினங்கள் யாவும் நிம்மதியாய் வாழ கந்தன் வழிசெய்வான் என அவன்தாள் வணங்கி நிற்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை,**
**நவாலி அட்டகிரி,**
**கந்தசுவாமி தேவஸ்தானம்.**




சிறி தேவி கருமாரி
நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
83/1, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0773604712



சுந்தர்சன்
இலத்திரனியல் சாதனங்களை இறக்குமதி
செய்பவர்களும், விநியோகிப்பவர்களும்
sundharsan@yahoo.uk



138, யாழ் வீதி, மானிப்பாய்.
தொ.பே:- 0212255136

RAM BUILDERS
Civil Engineering
Construction Work
"Sri Rangam",
Navaly North, Manipay.
Mob: 0777111344



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிரான வெளிநாட்டு ஆர்ப்பாட்டங்களை தடுப்பது எப்படி?

## தூதரக அதிகாரிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்களின் போது அதற்கெதிராக நடத்தப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தடுப்பது குறித்து இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு வெளிவிவகார அமைச்சு உரிய வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.**

வாய் மூல விடைக்காக ரவி கருணாநாயக்க எம்.பி.எழுப்பியிருந்த கேள்விக்கான பதிலை அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார்.

பிரதி அமைச்சர் தனது பதிலில் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி மற்றும் முக்கிய அமைச் சர்களின் வெளிநாட்டு விஜயங்களின் போது புலி ஆதரவாளர்களினால் கடந்த சில வருடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

புலி ஆதரவாளர்களாலும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களினாலும் நடத்தப்பட்ட இத்தகைய ஆர்ப்பாட்டங்களின் போது அந்த நாடுகள் உரிய பாதுகாப்பு வழங்கின. குறித்த நாடுகளின் சட்டப்படி அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதியுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நாட்டு அரசுகளுடன் இணைந்து கூட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-2)

# மும்மொழிகளிலும் தகவல்களை உள்ளடக்கிய தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தகவல்களை உள்ளடக்கிய தேசிய அடையாள அட்டைகளை புதிதாக வெளியிட தேவையான நடவடிக்கையை ஆட் பதிவு திணைக்கள ஆணையாளர் தற்போது மேற்கொண்டு வருவதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சவீந்திர பெர்ணான்டோ உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார் .இலத்திரனியல் அடையாள அட்டையாக வெளியிடப்படவுள்ள அந்த அடையாள அட்டை எப்படி தயாரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றன. இந்த பணிகள் நிறைவடைய மேலும் காலம் செல்லலாம் என தெரிவித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முன்னேற்றங்கள் ஏற்பட்டால் அது குறித்து உடனடியாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

இதனையடுத்து மூன்று மொழிகளில் அடையாள அட்டைகளை வெளியிடுவதற்காக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது சிங்கள மொழியில் மாத்திரம் வெளியிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை மும்மொழிகளிலும் வெளியிட வேண்டும் என மஹரகம கொடிகமுவ பிரதேசத்தை சேர்ந்த பிரசாத் தனஞ்சய குருகே என்பவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே சவீந்திர பெர்ணான்டோ இவ்வாறு கூறியுள்ளார்.

சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படுவதால் தமிழ் மொழியில் பணிகள் மேற்கொள்ளப்படும் வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு சென்று ஏதேனும் பணிகளை மேற்கொள்வதில் மக்களுக்கு சிரமங்கள் ஏற்படுவதாக மனுதார் மனுவில் சுட்டிக்காட்டியிருந்தமை தெரிந்ததே. (அ-2)

# ஆசியாவின் ஆச்சரியமான நாடாக இலங்கை மாறிவருகின்றது-மஹிந்த

எமது நாட்டில் திறமையான பிள்ளைகள் , திறமையற்ற பிள்ளைகள் என்ற பாகுபாடில்லை. எமது இளைய சந்ததியினர் நாட்டுக்கு சேவை செய்வார்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ் வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில், அனைத்து பிள்ளைகளும் இந்த நாட்டிற்காக பிறந்தவர்களென்றும் அவர்களோடு இணைந்து அனைவரும் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகெங்கிலும் சென்று நாம் இலங்கையர் என்று கூறி பெருமைப்படும் அளவில் இலங்கை உன்னதமான நாடாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இது ஒரு தோல்வியான நாடு என எப்போதும் சர்வதேசத்திற்குக் காட்ட விளையும் தரப்பினருக்கு நாம் பெற்றுக் கொண்ட வெற்றிகள் பதிலாக அமையும்.

கடந்த 2006 ஆம் ஆண்டில் நான் நாட்டுக்கு ஒரு வாக்குறுதியை அளித்தேன். அன்று நாம் முகங்கொடுத்த சவால்கள் மற்றும் நெருக்கடிகளை எதிர்கால எமது சந்ததிக்கு விட்டு வைக்கப் போவதில்லை. அதை நான் நிறைவேற்றியுள்ளேன். எமது உயிரைப் பணயம் வைத்து பாரிய அர்ப்பணிப்புடன் அதற்காக நாம் செயற்பட்டுள்ளோம்.

இன்று இந்த நாட்டில் எந்தப் பிரதேசத்திலும் அச்சுறுத்தல், மரண பயம் இல்லை, எந்த திசைக்கும் சுதந்திரமாக சென்று வரக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று அத்தகைய நிலை மாற்றப்பட்டுள்ளது. அபிவிருத்தி யுகத்தை ஆரம்பித்து ஆசியாவிலேயே தூய்மையான நகரங்களை இங்கு உருவாக்கி வீதிகள், அதிவேக நெடுஞ்சாலைகள் என மாற்றங் காணப்பட்டுள்ளது.

நூற்றுக்கு 95 வீதமானவர்களுக்கு நாட்டில் மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. உலகில் எந்த நாட்டுக்குச் சென்றாலும் எமது நாட்டை பெருமையுடன் குறிப்பிடும் வகையில் நாடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

உயர்தரத்தில் சித்தி பெறத் தவறினால் அரசியல்வாதி ஒருவரின் ஆதரவு இல்லாமல் தொழில்வாய்ப்புப் பெற முடியாது என்ற நிலையே ஒரு காலத்தில் காணப்பட்டது. வரலாற்றில் தொடர்ந்து இந்த பிரச்சினைக்கே நாம் தீர்வுகாண விளைகின்றோம்.

நாம் பாடசாலைகளில் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம்.

இதன்படி எதிர்வரும் 2016 இல் சகல மாவட்டங்களிலும் தலா ஒன்று என்ற ரீதியில் 25 பல்கலைக்கழங்களை நிறுவவுள்ளோம்.7 ஆயிரத்து 500 பேரை இணைக்கவுள்ளோம். கல்விக் கல்லூரிகளில் வருடாந்தம் 200 பேரை இணைத்துக் கொள்ளவுள்ளோம். கல்வி அமைச்சர்களுக்கு இந்த இலக்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க 2016 இல் கணிதம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான மாணவர்களை 40 வீதமாகவும் வணிக மாணவர்களை 35 வீதமாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துளோம். இதற்கான நிதியை செலவிடவும் நாம் பின்னிற்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துார். (அ-2)

# இல்லங்களுக்கிடையான நாடகப்போட்டி

(மல்லாகம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் (தேசியப்பாடசாலை) இல்லங்களுக்கிடையிலான நாடகப்போட்டி நாடக விழா நிகழ்வுகள் எதிர்வரும் ஜுலை மாதம் 3 ஆம் திகதி கல்லூரி அரங்கில் இடம்பெறவுள்ளது.நாடகப் போட்டியில் ஆற்றுகை செய்யப்படுகின்ற நாடகங்களானவை சமூக நாடகமாக இருத்தல் வேண்டும். தனி மனிதரையோ இனத்தையோ புண்படுத்துவதாக அமைதல் கூடாது. நாடகம் 25 தொடக்கம் 30 நிமிடத்திற்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும். 15 நடிகர்களுக்கு மேற்படாமல் பாடகர் மற்றும் கலைஞர் உட்பட 25 உறுப்பினர்கள் நாடக குழுவில் இடம்பெறுதல் வேண்டும். இந்நாடக விழாவில் மாணிக்கர் இல்லம், சம்பந்தர் இல்லம், வாகீசர் இல்லம் ,சுந்தரம் இல்லம் ஆகிய நான்கு இல்லங்களின் மாணவர்களின் ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளன. (அ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்




# இன்று தேர்த்திருவிழா

## வரம் தரும் தேவி

அலைகடலின் ஓசையிலே,
அரவத்தில் அமர்ந்து இருந்து
அடியவர்களை காத்திடும்
அன்ன பூரணியே இன்று
உனக்கு தேரம்மா
வடம் பிடித்து
வரம் கேட்க வருகின்றோம்
நாக தேவி அம்மா

க.மலர் , சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

## அளித்திடம்மா அருள்தனை

நயினையின் நாயகியே
நானிலம் காக்கும் நம்தாயே
நம்மவர் குறைதீர்க்க
வந்திடுவாய் வீதி வலம் தனையே
வந்தோர் கோடி பலர்
வரம் வேண்டி நின்றிடவே
அளித்திடம்மா அருள்தனையே–எம்
அன்னபூரணித்தாயே

ஸ்ரீ.சொரூபிகா, மாவடி, வட்டுக்கோட்டை.

## இன்று தேரேறி ஓர் அற்புதம் செய்திடம்மா

தீராதவினை தீர்க்கும் தீவகத்தின் நாயகியே
நாராகநைந்து நொந்து நம் தமிழர் வாழ்வுதனை
பாராதிருப்பதேனோ பாம் பணிந்த பூஷணியே
தேரோடும் இவ்வேளையேனும் நீ

எனக்காக ஒன்றும் உன்னை இரந்து நாம்கேட்கவில்லை
சுணங்காது நம் தமிழர் சுயத்துடன் வாழ்வதற்கு
இன்றைய இளைஞர் அருளை ஏற்க மறுப்பதற்கும்
இன்றைய தேரேறி ஓர் அற்புதத்தைச் செய்திடம்மா.

கவிமணி அன்னைதாஸன்
ஊரெழு

## மணிபல்லவத்தின் நாயகியே தேரில் வாராய்!

துள்ளி வரும் கடல் அலைகள் துதிகள் பாட –கருடன்
கல் எழுந்து உன் புகழின் கதைகள் பேச
வேத ஒலி நாத இசை நலங்கள் கூட்ட
வேப்பமரச் சோலை எழில் குளிர்ச்சி ஊட்ட
ஆர்ப்பரிக்கும் அடியவர் எம் குறைகள் தீர
ஊர் கூடி உளம் மகிழ்ந்து விடம் பிடித்தோம்
அல்லறும் அடியவர்கள் அவலம் போக்க–மணி
பல்லவத்தின் நாயகியே தேரில் வாராய்!

நயினை நடா மயூரன்

## நயினை நாகபூஷணி திருவிழா

தனயர்களின் துயரழிக்க தேரேறி வருகிறாள்
இருவினையும் ஒழிந்திடவே
தேரில் கோலம் கொண்டுள்ளாள்
கடல் கடந்த அடியவரின்
கலியழிந்து போகுதே சரணடைந்த பக்தர் துன்பம்
பொடித்திடவே வருகிறாள்
இருளர்மன இருளகல
தேரில் உலா வருகிறாள்
வதைத்தெடுக்கும் அரக்கர்
குணகியல் பொழிந்து போகுமோ
வாட்டும் துயர் நீங்கி
வாழ்வில் ஒளி பெருகுமே

மகேந்திரா இளங்கோ,
வதிரி.

ஒரு கோடியில் நின்று காட்டும் பிடிவாதம் ஒருபோதும் நிலைக்காது.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சிங்கள மக்களின் ஆதரவைப் பெறும் பிரசார பொறிமுறை உடன் அவசியம்

விடுதலைப் பேராட்டத்தின், தோல்விக்கான காரணங்கள் என்ன என்ற ஆய்வுகள் எங்களை மீளமைப்புச் செய்வதற்கு மிகவும் அவசியமானவை. அந்த வகையில் இராணுவபலம் என்பதைத் தவிர அரசியல் பலம் பற்றிய சிந்தனைகள் விடுதலைப் புலிகளிடம் இருக்கவில்லை என்று விமர்சிப்போரும் இருக்கவே செய்கின்றனர்.

படைப் பலத்தையும் அரசியல் பலத்தையும் சமாந்திரமாகக் கட்டியெழுப்பி இருக்கவேண்டும். ஆனால் அரசியல் என்பதோ திரும்பிப் பார்க்கப் படாத பகுதியாக இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டுக்களில் நியாயம் இல்லாமலும் இல்லை.

விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்பதற்காக தமிழ் மக்கள் தோற்றுப்போன இனமாகவே வாழுதல் என்பது ஏற்புடையதல்ல.

எனவே எங்களுக்கான உரிமை, எங்களுக்கான தேசியம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அந்தச் சிந்தனையின் மத்தியில் பலமான அடித்தளம் இடப்படுவது அவசியம்.

தமிழ்ப் புத்திஜீவிகள், அரசியல் அனுபவஸ்தர்கள், சட்ட வல்லுநர்கள் என ஒரு பலமான கட்டுமானம் முதலில் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகளே தனித்து தமிழர்கள் உரிமைகள் பற்றியும் அதற்கான இராஜதந்திர தீர்வை பற்றியும் தீர்மானிக்கின்ற நிலைமை இருக்குமாயின் தமிழ் மக்களின் நிலைமையில் முன்னேற்றகரமான சம்பவங்கள் எதுவும் நடந்துவிடாது.

இப்போதுகூட போரில் வெற்றி பெற்றிருந்தாலும் தமிழ் மக்கள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்து விடுவார்கள் என்ற அச்சம் ஆளும் வர்க்கத்திடம் இருக்கவே செய்கின்றது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வடக்கு மாகாண சபைக்கு வழங்குவதானது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது என்ற பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்து மேற்போன்ற சந்தேகத்தை உறுதி செய்கின்றது.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு சிங்கள ஆளும் வர்க்கம் எதனையும் தரப்போவது இல்லை என்ற மனநிலை தமிழ் மக்களிடம் இருக்கவே செய்கிறது.

இந்த இருநிலை வேறுபாடுகள் இனவிவகாரத்தை நீட்டிச் செல்வதற்கு தூண்டுகோலாக அமைந்து விடுகின்றது என்பது உண்மை. ஆனாலும், இந்த இருவேறுபாட்டு நிலைமைகளுக்கு அப்பால் தமிழ் மக்களுக்கான உரிமை வழங்கப்படவேண்டும்.

வடக்கு மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை கொடுக்க வேண்டும் என்ற கருத்து நிலைகொண்டவர்களும் சிங்கள மக்களில் பலர் இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்வது அவசியம்.

13-ம் திருத்தச் சட்டமூலத்தை ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கின்ற ஜாதிக ஹெல உறுமயவை கடுமையாக எதிர்க்கின்ற அமைச்சர்கள் பலர் இருக்கிறார்கள் என்ற செய்தி தமிழ் மக்களுக்கு மிகவும் சாதகமானது.

ஆக, நாம் இங்கு கூறவருவது எல்லாம், தமிழ் மக்களுக்கு ஆதரவாக சிங்கள மக்களை திசை திருப்புதல் அல்லது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுதல் என்பதாகும்.

இதுவிடயத்தில் முந்தியும் இப்போதும் கூட நாம் கரிசனை காட்டவில்லை என்றே கூற வேண்டும்.

சிங்களவர்கள் என்பதற்காக அவர்கள் ஒட்டுமொத்தத்தில் எங்களுக்கு எதிரானவர்கள் என்ற நினைப்பு அபத்தமானது. எங்களுக்கு ஆதரவானவர்கள் அவர்களிலும் இருக்கிறார்கள் என்றால் அத்தகையவர்களை நாம் எமக்கானவர்களாக ஆக்கிக் கொண்டால் காரியம் கனகச்சிதமாய் நிறைவு பெற்றுவிடும்.

அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, டியு குணசேகர, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றவர்கள் தமிழ் மக்கள் சம உரிமையோடு வாழவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்கள். இத்தகையவர்களின் கூட்டு தென்னிலங்கையில் பலமாகி விட்டால் பேரினவாதிகளின் கொட்டம் தானாக அடங்கி விடும்.

எங்களது நிலைமைகளை எடுத்துச் சொல்லாது விடத்தும் எங்கள் பற்றிய எதிர்வினையான பிரசாரம் செய்யப்படும் போதும் தமிழர்களுக்கு ஆதரவான சிங்களவர்களும் எதிர்ப்போக்கை அடைவர் என்ற உண்மையின் மத்தியில், எங்கள் பிரச்சினைகளை சிங்களமக்களுக்குத் தெரியப்படுத்தும் பிரசார பொறிமுறை உருவாக்கப்படுவது காலத்தின் அவசர தேவையாகும்.

# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 176 பேர் கைது

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் 176 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம் ஜெப்றி தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் 126 பேரும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் 51 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் கொள்ளையடித்த 02 பேரும் பிறருக்கு அடித்து காயத்தினை ஏற்படுத்திய 44 பேரும் சந்தேகத்தின் பேரில் 07 பேரும் திருட்டு மின் சாரம் பெற்ற 12 பேரும் விபத்தினை ஏற்படுத்திய ஒருவரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 18 பேரும் குடி போதையில் வாகனம் செலுத்திய 10 பேரும் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்த 10 பேரும் மோசடியில் ஈடுபட்ட ஒருவரும் திருட்டில் ஈடுபட்ட 07 பேரும் பொது இடத்தில் மது அருந்திய 11 பேரும் அத்து மீறி பிறர் வீட்டுக்குள் நுழைந்த 03 பேரும் மொத்தம் 126 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட் சகர் பிரிவிற்குள் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 4பேரும் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட 10 பேரும் சந்தேகத்திற்கிடமாக அலைந்து திரிந்த 03 பேரும் ஏனைய குற்றச்சாட்டுக்களின் பேரில் 33 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு பொலிஸ் பிரிவுகளிலும் மொத்தமாக 176 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர் என அவர் தெரிவித்தார். (அ-4)

# அ. அட்டை கண்டெடுப்பு

கொக்குவில் கிழக்கு கோணமலை ஒழுங்கை தெய்வேந்திரம் றஜிதீபா என்பவருடைய 838261817V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை கிளிநொச்சி கரடிப் போக்குச்சந்தியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையினை கொக்குவில் கிழக்கு கிராம சேவகர் அலுவலகரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் மேற்படி கிராம சேவகரிடம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-254)

# இளையோருக்கு தொழில் வாய்ப்பு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரால் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் இம்மாவட்டத்தில் வசிக்கின்ற இளைஞர் யுவதிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளில் உள்ளக, வெளிக்கள தொழில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ள விரும்பும் இளைஞர் யுவதிகள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் தேசிய வீடமைப்பு கட்டடத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது இவ்விடயம் தொடர்பாக மேலதிக விபரத்திற்கு தேசிய இளைஞர் சேவை மன்ற பொது முகாமையாளரின் தொலைபேசி இலக்கமான 0770510966 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குளிர்பானத்துக்குள் பூஞ்சன குடுமிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட்ட குளிர்பானத்தில் பூஞ்சனக் குடுமிகள் காணப்பட்டதனால் நேற்று அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


அத்தோடு குறித்த குளிர்பானத்தை கொள்வனவு செய்த அரச அதிகாரிகளினால் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடம் விடயம் குறித்து தெரியப்படுத்தப்பட்டதோடு குளிர்பானத்தை விநியோகிக்கும் முகவருக்கும் தெரியப் படுத்தப்பட்டுள்ளது. (அ-6)

# வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15,17,19 ஆகிய வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் மாகாண மட்ட சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளை பங்கு கொள்ளுமாறு வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் அறிவித்துள்ளார். (அ-3-266)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



என்னுடைய இயல்பு நிலையை. நீங்கள் புரிந்து கொள்ளவே முடியாது. உங்களைப் பொறுத்தவரை இடம் மற்றும் காலத்தின் வரையறை உள்ளது. உங்களுக்கு உடலே எல்லை என்றும் மற்றவர்கள் உங்களில் இருந்து தனி என்ற உணர்வும் உள்ளது. எனக்கு அப்படியில்லை. நீங்கள் தனி என்றே நான் உணர்வதில்லை. அது எப்படி இருக்கும் என்பதை அறிய வேண்டுமென்றால் அந்த அனுபவத்தைப் பெற்றால் தான் தெரியும். நான் உங்களுக்கு அதைக்கொடுக்கும் போது புரியும். வாஸ்தவத்தை முற்றிலும் வித்தியாசமாக அனுபவிப்பீர்கள். நீங்கள் பிராணிகளை உணர்வதும் எறும்பு என்ன சிந்திக்கிறது என்று தெரிந்து கொள்வதும் பிற மனிதர்களை உணர்வதும் ஒரே நேரத்தில் நடக்கும். இது சாத்தியம். இந்த நிலை உங்களுக்குப் பழக்கமில்லாததால் இது நடக்க முடியாது என்றும் நீங்கள் தனிப்பட்ட நபர் என்றும் நினைக்கிறீர்கள். யாரும் மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டவர் அல்ல. அனைவரும் ஒருவரேதான். ஆகவே இப்படிப்பட்ட உன்னத சைதன்ய நிலையை அளிப்பதுதான் என் முக்கிய நோக்கமாகும். இதுபோன்ற நிலை சிலருக்கு சில நாட்களும் சிலருக்கு சில மணிநேரங்களும் கிடைக்கின்றது. ஆனால் முழுமையாக எப்போதும் இந்த நிலையில் இருப்பவர்கள் மெதுவாக உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவிலேயே பெரும்பாலானவர்கள் எந்தநேரமும் இந்த நிலையை அனுபவிப்பார்கள் என்று நான் உணர்கிறேன். இது சாத்தியம்.

# கண்ணகி அம்மன் ஆலய பொங்கல்

மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு பூசைகளும் விசேட ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணிக்கு தீ மிதித்தலும் 4 மணிக்கு வழி வெட்டலும் நடைபெறவுள்ளது. (அ-5)

# பிணக்குகள் திகதி மாற்றம்

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையினால் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த பிணக்குகள் சம்பந்தமான கலந்துரையாடல்கள் போயா விடுமுறை காரணமாக இன்று சனிக்கிழமை நடைபெறும் என பிரதேச மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (அ-3-134)

# கருமாரி அம்மன் தேர்த்திருவிழா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை ஸ்ரீ கருமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் தீர்த்தத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (அ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## எல்லோரும் நம் சகோதரரே!



- எறும்பும் தேவதூதனும் ஒன்றுதான். புழுவும் கூட கடவுளின் உடன்பிறப்பே. எந்த உயிரிடத்தும் உயர்வோ, தாழ்வோ இல்லை.
- நமது உள்ளங்களை நாம் எப்போதும் திறந்து வைத்திருந்தால் பிரபஞ்சத்தில் உள்ள நல்ல நினைவுகள் அனைத்திற்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.
- அன்பே உலகில் மேலானது. யோகப்பயிற்சியைவிட அன்பே உயர்ந்தது.
- பிறரைத் துன்புறுத்துவது எளிது. எழுகின்ற கையைத் தாழ்த்தி அமைதியாய் நிற்பது மிகவும் கடினமானது.
- மனிதன் பிறந்திருப்பது இயற்கையை வெல்வதற்காகவே. அதற்குப் பணிந்து போவதற்கு அல்ல.
- இந்த மண்ணுலகம் பெரிய பயிற்சிக்கூடம். நம்மை வலிமையுள்ளவர்களாக்கிக் கொள்வதற்காகவே இங்கு நாம் அனைவரும் வந்திருக்கிறோம்.
- வழிபாட்டில் கடவுளை நம் பெற்றோராக ஏற்றுக்கொண்ட பின்பு அன்றாட வாழ்வில் சந்திக்கும் அனைவரையும் நம் சகோதரர்களாக ஏற்கத் தயங்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரமற்ற முறையில் வெதுப்பக உற்பத்திகள்

## வவு. மக்கள் விசனம்

(பூந்தோட்டம்)

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் உள்ள வெதுப்பகங்களில் வெதுப்பக உற்பத்திகள் சுகாதாரமற்ற முறையில் வைத்து விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பிரபல வெதுப்பக விற்பனை நிலையங்களில் காலையிலும் மாலையிலும் வெதுப்பக உற்பத்திகள் சுகாதாரமான முறையில் மூடி வைக்கப்படாமல் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்யப்படுகின்றது.

வெதுப்பக உற்பத்திகள் பாதுகாப்பான முறையில் கரண்டிகளால் எடுத்து விற்பனை செய்யப்படாமல் விற்பனையாளர்களின் கைகளால் எடுத்து விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இப்பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கவனத்தில் எடுத்து சுகாதாரமான முறையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் தொற்று நோய்களில் இருந்து மக்களை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோருகின்றனர். (3-266)

# பிரதேச செயலாளர் பதவியேற்பு



(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலாளர் கே.உதயராசா கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 5 வருடங்களாக வவுனியா பிரதேச செயலாளராக கடமையாற்றிய அ.சிவபாலசுந்தரன், வடமாகாண திணைக்களமொன்றுக்கு மாற்றலாகியதை அடுத்தே வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றிய கே.உதயராசா புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-3-250)

# தடை செய்யப்பட்ட வலைகளால் நந்திக்கடலில் இறால் பிடிப்பு

## உடன் நிறுத்த மீனவர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

**நந்திக்கடலில் தடை செய்யப்பட்டுள்ள வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் நந்திக் கடலை நம்பியே தமது ஜீவனோபாயத்தினை கொண்டு செல்கின்றனர்.

இந்நிலையில் தடைசெய்யப்பட்டுள்ள விடுவலை, தங்கூசி வலை, டிஸ்கோ வலை, இழுப்பு வலை போன்றவற்றை பயன்படுத்தி சிலர் இறால் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் இப்பகுதி மக்கள் அன்றாட வாழ்க்கைச் செலவை நகர்த்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இக்கடலில் ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை வீச்சு வலையினூடாக இறால் பிடிப்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் தடை செய்யப்பட்ட வலைகளை கடல் முழுவதும் பயன்படுத்துவதனால் வீச்சுத் தொழிலாளிகள் கடலில் இறங்கி வீசுவதற்கு இடமில்லாதுள்ளனர்.

வீச்சு வலைத் தொழிலாளி ஒரு நாளைக்கு 500 ரூபாவுக்கு இறால் பிடிக்கின்றபோது தடை செய்யப்பட்ட விடுவலையினைப் பயன்படுத்துபவர்கள் 10 ஆயிரம் ரூபாவுக்கு இறாலைப் பிடிக்கின்றார்கள்.

இதனால் வருடத்தில் தொடர்ந்து பத்து மாதங்கள் செய்யக் கூடிய தொழில் வளம் 2 மாதங்களில் முடிவடைந்து விடுவதால் வீச்சுத் தொழிலை நம்பி வாழ்கின்ற மீனவர்களின் தொழில் சுரண்டப்படுகின்றது.

நந்திக் கடல் பகுதியில் விடு வலை பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதனால் இவ் வலையைப் பயன்படுத்துபவர் கள் இரவு நேரங்களிலும் ஆட்கள் நடமாட்டம் இல்லாத வேளைகளிலுமே இறால் பிடிப்பில் ஈடுபடு கின்றதோடு வலைகளை வீட்டிற் குள் மறைவாக வைத்தே பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறாக தடை செய்யப்பட்டுள்ள வலைகளைப் பயன்படுத்துவதால் கடல் வளங்கள் அழிக்கப்படுவதோடு கடலை நம்பி வாழ்க்கையை நகர்த்தி வருகின்ற மீனவ குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தடை செய்யப்பட்டுள்ள வலைகளை உபயோகித்து மீன் பிடியில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் முல்லை. மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்தோடு உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாம் போராட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3-267)








கிளிநொச்சி கனகபுரம் றோயல் முன்பள்ளியின் வருடாந்த மழலைகளின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மி.மதுரநாயகம் உரையாற்றுவதையும் மழலைகளின் பாண்ட் வாத்திய அணியையும் மழலைகளின் விநோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# மின்கட்டணம் செலுத்தாததால் மின்சார இணைப்பு துண்டிப்பு

## முன்னெச்சரிக்கை இல்லாததால் முல்லைத்தீவு மக்கள் திண்டாட்டம்

(மல்லாவி)

இலங்கை மின்சார சபையினுடைய முல்லைத்தீவு மாவட்ட பிரிவினரால் மின்சாரக் கட்டணங்கள் செலுத்தாது காலதாமதம் செய்த வாடிக்கையாளர்களின் மின்சாரம் துண்டிக்கும் நடவடிக்கை மின்சாரத்தைவிட அதி வேகமாக நடைபெற்று வருகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவது,

முல்லை. மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் 30 வருடங்களின் பின் மின்சாரத்தை பெற்றனர்.

இதில் மீள்குடியேறிய பொது மக்கள் என்ற ரீதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் ஆறு மாதங்களுக்கு இலவசமாக மின் சாரம் வழங்கப்படுமென கூறப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத் தப்படவில்லை என மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இவ்வாறு மின்சாரம் பெற்றவர்களில் மின்சார கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய வர்த்தக நிலையங்கள் உட்பட வாடிக்கையாளர்களின் மின்சாரம் துண்டிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் முல்லை. மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்செல்வன் தலைமையில் நடை பெற்றுவருகின்றது.

மின்சாரம் துண்டிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளதாக எச்சரிக்கை கடிதங்கள் எதுவும் தமக்கு அனுப்பாது, திடீரென வந்து துண்டித்ததால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். சிலர் குப்பி விளக்குகளுக்கு மண்ணெண்ணெய் கூட இல்லாத நிலையில் அல்லல்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இம் மின்சார துண்டிப்பினால் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குளிர்சாதன பெட்டிகளில் பாதுகாக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் பழுதடைந்து விட்டதாக தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் மின்சாரம் துண்டிக்கப்பட முன்னர் அனுப்பப்படும் சிவப்பு நிற எச்சரிக்கை கடிதம் தமக்கும் அனுப்பி தகவலை வழங்கிய பின்னர் மின்சாரத்தை துண்டிக்குமாறு பாதிக் கப்பட்ட மக்கள் கவலையுடன் தமது கருத்தினை தெரிவித்துள்ளனர். (3-15)




# கைத்தொழில் முயற்சி வழிகாட்டல் செயலமர்வு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் பூநகரி பிரதேச செயலகப் பிரிவினூடாக அண்மையில் மெழுகுதிரி செய்யும் கைத்தொழில் முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகள் பொதுமக்களுக்கு நடத்தப்பட்டது.

அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் முயற்சியால் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமாரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இச் செயலமர்வை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.சசிகரன் மேற்கொண்டார். அன்புபுரம், கரடிக்குன்று, நாவாந்துறை கிராம பொது மக்கள் பலர் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

அரச, அரச சார்பற்ற துறைகளால் வழங்கப்படும் நிதி உதவிகளைக் கொண்டு கைத்தொழில் முயற்சிகளைத் திறம்பட மேற்கொள்வது தொடர்பான பயனுள்ள செயலமர்வாக இது அமைந்ததாக கலந்துகொண்ட பொது மக்கள் தெரிவித்தனர். (சு-3-254)

# மணல், கிரவல் பெறுவதற்கான அனுமதியை இரத்துச் செய்க!

## புதிய விதிமுறை நடைமுறைக்கு-சுசில்

வன்னி மாவட்டங்களில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை வளங்களான மணல், கிரவல் அகழ்வதற்காக இதுவரை வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் அனைத்தையும் இரத்து செய்து புதிதாக விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி பத்திரங்களை வழங்குமாறு சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க சக்தி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல், கிரவல் அகழ்வதற்காக இதுவரை வழங்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் அனைத்தையும் இரத்து செய்து புதிதாக விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி பத்திரங்களை வழங்குவதுடன் புதிதாக அனுமதி பத்திரங்கள் வழங்கும்போது பிரதேச செயலாளர்கள், வனவளத் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரின் சிபார்சுகளும் பெறப்பட்டு வழங்கப்படுவதோடு அந்த அனுமதி பத்திரங்களின் பிரதிகள் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அத்தோடு பொலிஸ்மா அதிபர், பிரதேச பொலிஸ் அதிகாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்தோடு மாவட்ட அரச அதிபருக்கும் அனுமதி பத்திரங்களின் பிரதிகள் அனுப்பி வைக்கப்படுவதோடு அங்கிருந்து பிரதேச செயலாளர்களுக்கு அனுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்ப்பாண மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா, கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா, சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளர் கிளிநொச்சி, யாழ்.அரச அதிபர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் வடமாகாணத்தைச் சேர்ந்த திணைக்களங்களின் உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு வெட்கம் இல்லை - மத்யூஸ்

நாணய சூழற்சியில் தோல்வியடைந்தமை மற்றும் டில்ஷான் உபாதைக்குஉள்ளானமை ஆகியனவே இந்திய அணிக்கெதிரான போட்டியில் தமது அணி தோல்வியடைய முக்கியக் காரணமாக அமைந்தாக இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் இந்திய அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததை அடுத்து கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பலம் வாய்ந்த துடுப்பாட்டத்தைக் கொண்டுள்ள இந்திய அணியை வெற்றி கொள்வதற்கு 181 ஓட்டங்கள் போதுமானது அல்லவெனவும், அஞ்சலோ மத்யூஸ்



குறிப்பிட்டுள்ளார்.


வீரர்களின் முதலாவது இலக்கான அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியதால், தமது அணி வெட்கப்பட வேண்டிய ஓர் அணி அல்லவெனவும் அஞ்சலோ மத்யூஸ் கூறியுள்ளார்.

கார்டிப் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயசுழற்சியை தாம் முக்கியமானதாக கருதிய போதிலும், அது சாதகமாக அமையவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் நேற்றுமுன்தினப் போட்டியில் நம்பிக்கை நட்சத்திரமாக கருதப்பட்ட மலிங்க பிரகாசிக்க தவறியமை குறித்து அவர் எந்தவொரு விமர்சனத்தையும் வெளியிடவில்லை.

கார்டிப் மைதானத்தில் காணப்பட்ட வானிலை காரணமாக அவரின் பந்துவீச்சு சாதகமாக அமையவில்லை என்று இலங்கை அணித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## விம்பிள்டன் டென்னிஸ் பெடரர்-நடால் மோத வாய்ப்பு



இந்த ஆண்டின் 3-வது கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் டென்னிஸ் தொடருக்கான அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது.

இதில், ஆடவர் ஒற்றையர் பிரிவில், 7 முறை சாம்பியன் பட்டம் வென்ற ரோஜர் பெடரரும், 2 முறை பட்டம் வென்ற ரபேல் நடாலும் தங்கள் போட்டிகளில் வெற்றி பெற்று காலிறுதிக்கு வந்தால், இருவரும் நேரடியாக மோத வேண்டும்.

திங்கட்கிழமை நடைபெறும் முதல் சுற்றில் ரோஜர் பெடரர், ரோமானியாவின் விக்டர் ஹானஸ்கியுவை

இதேபோல் இந்த அட்டவணையானது, உலகின் நம்பர் ஒன் வீரரான நோவக் ஜோகோவிச்சுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாக அமைந்துள்ளது. 2011-ம் ஆண்டு விம்பிள்டன் சம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச் இறுதிப்போட்டி வரை முன்னணி வீரர்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியதில்லை. முதல் சுற்றில் அவர் ஜெர்மனியின் புளோரியன் மேயரை சந்திக்கிறார்.

காலிறுதிப்போட்டிகளில் ஜோகோவிச், தோமஸ் பெர்டிச்சை சந்திக்க வேண்டும். இதேபோல் மற்ற காலிறுதி போட்டிகளில் டேவிட் பெரர்-டெல் போட்ரோ, டிசோங்கா-ஆண்டி முர்ரே விளையாட வேண்டியிருக்கும்.

## முதலீட்டு கருத்தரங்கு

பங்குச் சந்தை முதலீட்டாளர்களுக்கான 2-ம் நிலைப் பயிற்சிப் பட்டறை இன்று மாலை 3 மணி முதல் 6 மணிவரை பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு, நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு எனும் தலைப்பில் முழுமையான நடைமுறை மாற்றங்களை உள்ளடக்கியதாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் இன்று நேரடியாகவே இல.147, 2/3, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளையின் கேட்போர் கூடத்திற்கு வந்து அல்லது 0777822014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவினை மேற்கொண்டு கலந்துகொள்ள முடியும் என பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளை முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார். (11)

## நாடாளுமன்ற...

ண்டோபுள்ளே, ஜனக்க பண்டார ஆகியோரே அங்கம் வகிக்கின்றனர்.

இந்த அறிவிப்பை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று விடுத்தார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இந்த குழுவில் தங்களுடைய பிரதிநிதிகளை நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தெரிவு செய்யும் என்றும் இது தொடர்பிலான கட்சியின் நிலைப்பாட்டை தலைவர் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திற்கு முன்கூட்டியே அறிவித்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

13-ம் சட்டத் திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வெட்டிக் குறைக்கும் நோக்கிலேயே இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். (செ-11)

## த.தே.கூட்டமை...

தேசிய மக்கள் முன்னிணியினர் ஜேர்மனி பயணமாகியுள்ளனர்.

ஜேர்மனியை மையமாக கொண்ட இயங்குகின்ற வேக்கப் பவுண்டேசன் என்ற அமைப்பு தமிழ் அரசியல் கட்சிகளிடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கச் செய்ய முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகளையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் அழைத்து கடந்த நவம்பர், ஜனவரி, மார்ச் ஆகிய காலப்பகுதிகளில் அழைத்து மாநாட்டினை நடத்தியிருந்தது.

இதன் தொடர்ச்சியாக இன்றும் நாளையும் நடைபெறும் மாநாட்டுக்கு வருமாறு விடுத்த அழைப்பினையடுத்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் நேற்று ஜேர்மனி பயணமாகியுள்ளனர்.

இதேவேளை, தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் செல்கின்றனர். (செ-250)

## அமைச்சர் ராஜித...

பட்டுள்ளதுடன், சுழிபுரம் இறங்குதுறை கடற்றொழில் அமைச்சினால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-6)

## இலங்கையிடம்...

பிரத்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் றன்கின், மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு என்ற விடயங்களில் தீர்க்கமான முன்னேற்றத்தை காணுமாறு இலங்கையிடம் வலியுறுத்துவதற்கு பொதுநலவாய உச்சிமாநாடு நல்ல வாய்ப்பாக அமையும் என்றும் அவர் கூறினார். பொதுநலவாய உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான தீர்மானம் இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே எடுக்கப்பட்டுவிட்டது என்றும் ஜோன் றன்கின் தெரிவித்தார். பொதுநலவாயத்தை மிக முக்கியமான விடயமாக பிரித்தானியா கருதுகின்றது. இதனால் பிரதமர் டேவிட் கமருன் இந்த கூட்டத்துக்கு வருவதாக முன்னரே கூறிவிட்டார். பொதுநலவாயத்தின் விழுமியங்களான ஜனநாயகம், அபிவிருத்தி, மனித உரிமைகள், நீதி, சட்டத்தின் ஆட்சி என்பவற்றின் மீதான அதன் உறுதிப்பாட்டை இலங்கை வெளிப்படுத்துமென பிரித்தானிய அரசாங்கம் எதிர்பார்ப்பதாக ஜோன் றன்கின் மேலும் கூறினார். (செ-11)

## மகிந்தவின் முயற்சியை...

கவின் செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவர் கோ.க.மணி தலைமையில் சென்னையல் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பா.ம.க இளைஞர் அணி தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான அன்புமணி ராமதாஸ் முன்னிலையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையில் போர் முடிவடைந்த 3 மாதங்களில் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

ஆனால், போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் நிறைவடைந்து விட்ட போதிலும் அதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக தமிழர்கள் வாழும் பகுதிகளை சிங்கள மயமாக்குதல், தமிழர்களுக்கென உள்ள ஓரிரு அதி காரங்களையும் பறித்தல் போன்ற செயல்களில் தான் இலங்கை அரசு ஈடுபட்டுவருகிறது.

இதன் அடுத்த கட்டமாக ஈழத் தமிழர்களுக்கு பெயரளவிலாவது அதிகாரம் வழங்கும் நோக்குடன், 1987-ம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி கொண்டுவரப்பட்ட 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தையே ரத்து செய்ய ஜனாதிபதி ராஜபக்ஷ திட்டமிட்டிருக்கிறார்.

இதற்கான 19-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவை ராஜபக்ஷ அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

13-வது அரசியல் சட்டத் திருத் தம் இரத்து செய்யப்பட்டால் இது இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அவமரியாதையாக அமையும்.

எனவே, இந்த முயற்சியை தடுத்து நிறுத்துவதுடன், இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழீழம் தான் நிரந்தரத் தீர்வு என்பதால் அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்என்று பா.ம.க. தலைமை செயற் குழு வலியுறுத்தியுள்ளது. (செ-11)

## பிரபாகரனைத் தமிழர்...

கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிந்த பின்னர் வட பகுதி மக்களுக்கு உரிமைகளை வழங்கவில்லை. வடக்கின் மக்களது மனதில் இராணுவம் தொடர்பான எதிர்ப்புத் தன்மை நிலையே உருவாகும்.

இன்று யுத்தம் முடிந்தும் வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லை. பிள்ளைகள் தினமும் காண்பது இராணுவத்தினரை. எனவே, சிவில நிர்வாகத்திலிருந்து இராணுவத்தினரை விலக்க வேண்டும். ஆளுநர் தொடக்கம் கீழ் மட்டம் வரை அனைத்தும் இராணுவ மயமாகவே வடக்கில் இருக்கிறது.

தனது பிள்ளை யுத்தத்தால் இறந்த இடத்திற்கு சென்று கண்ணீர் அஞ்சலி செய்வதற்கு தாய்க்கு இடமளிக்காமல் தடுக்கப்படுகிறது. தமிழ் மக்களின் உணர்வுகள் மதிக்கப்படுவதில்லை.

13ஆவது திருத்தம் மாகாண சபைகள் தொடர்பாக நாட்டில் விவாதம் உருவாகியுள்ளது. எமது படை யினரின் அர்ப்பணிப்பில் யுத்தம் வெற்றி பெறப்பட்டுள்ளது. இந்த யுத்தம் பிரபாகரனாலோ அல்லது வேறெந்த சக்திகளாலும் இடம்பெறவில்லை.

தமிழ், சிங்கள இனவாதிகள், ஆட்சியாளர்களின் தவறுகள் 1978 இன் பின்னர் இந்தியா - புலி பயங்கரவாதத்தை போஷித்தது.

ஆயுதம் வழங்கி முகாம்கள் வழங்கி பயிற்சிகளை வழங்கி இந்தியா போஷித்தது. தமிழ் மக் களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அவர்களது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு கறுப்பு கொடி போட்டு எதிர்ப்பை வெளியிட முடியாது போனது என்றார்.

அரசு வட பகுதி தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தை ஜனநாயகத்தை வழங்கப் போவதில்லை என்ற செய்தியையே பிரபாகரன் தமிழ் மக்களுக்கு வழங்கினார் என்று தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க,

யுத்தத்தின் பின்னரும் அம் மக்களை அடக்குவதால் அம் மக்கள் அந்த மனநிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பிரபாகரனை சூரியக் கடவுளாக வணங்கினார்கள். தோல்வியடையாத தலைவராக அவரை மக்கள் பின்பற்றினார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

## இலங்கை இராணுவத்தை...

மென்றே மத்திய அரசு சீண்டிப் பார்க்கிறது. தமிழக அரசும், தமிழ் நாட்டில் மான உணர்வுள்ள அரசியல் கட்சிகளும், தமிழ் உணர்வாளர்களும் மத்திய அரசின் இந்தத் துரோகச் செயலுக்குப் பலத்த எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்ததையும் காங்கிரஸ் அரசு பொருட்படுத்தவே இல்லை.

கடந்த மே 27-ம் திகதியில் இருந்து இலங்கை இராணுவத்தின் விங் கமாண்டர் தசநாயக்க, மேஜர் ஹரிச்சந்திர ஆகியோர் பயிற்சியைத் தொடருவது மட்டுமல்ல, அவர்களுக்கு நீலகிரி மாவட்டத்தில் இன்பச் சுற்றுலாவையும் நடத்தி இருக்கிறது.

ஒரு பக்கத்தில் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை நாளும் தாக்குவதும், சிறை பிடிப்பதும் தொடர்கிறது. நாதியற்றுப் போய்விடவில்லை தமிழ் இனம், மானமும் வீரமும் அழிந்துவிடவில்லை என்பதை மத்திய அரசுக்கு உணர்த்த வேண்டியது நமது தலையாயக் கடமையாகும்.

எனவே, எதிர்வரும் 25-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு குன்னூர் வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியை முற்றுகையிடுவோம். மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுப்போம். எங்கள் தொப்புள்கொடி உறவுகளை, தமிழ்க்குலச் சொந்தங்களைக் கொன்று குவித்த இரத்தம் தோய்ந்த கரங்களோடு உலவுகிற அவர்களுக்கு எங்கள் மண்ணிலேயே பயிற்சியா? இந்திய அரசே! அவர்களை உடனே வெளியேற்று! எனும் கோரிக்கையை முன் வைத்து முற்றுகைப் போர் நடத்துவோம்.

இதனை வலியுறுத்தி தமிழகத்தின் நாலா திசைகளில் இருந்தும் அணி திரண்டு வாரீர்!

நானும் உங்களோடு பங்கேற்கிறேன். இந்திய அரசின் துரோகத்துக்கும், ஆணவத் திமிருக்கும் பாடம் புகட்ட, தமிழகத்தை ஆயத்தப்படுத்த இந்த அறப்போர் களத்தில் அணிதிரள்வோம் வாரீர்!" என்று அழைப்பு விடுத்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Soft view Computer Center**
கணனி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
102, Main Street, Jaffna, E.C Colin
T.P:- 021 222 4885, 0779053545
யாழ்.திருமறைக் கலாமன்றம் அருகாமையில் (C-3726)

**உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்புகள்.**
விமானத் துறையிலும் துறைமுகத்திலும் (தனியார்) வேலை வாய்ப்புகள். விமான நிலையம் (தனியார்) சுத்திகரிப்பாளர்/ துறைமுகத்தில் (தனியார்) சாதாரண ஊழியர்கள்/பெயின்டர்/ வெல்டிங்/தச்சு போன்றவற்றுக்கு வெற்றிடம் உண்டு. 18-50 வயதான ஆண்-பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் 18,000/=, 35,000/=, 40,000/= (தொழில் அடிப்படையில் சம்பளம்) உணவு, தங்குமிடம் சகாய விலைகளில்.
வருகை தரும் நாளிலே வேலை.
தொடர்பு- 0775561883, 0778430179 (C-3725)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093
61, Kachchery-Nallur Road, Jaffna.
(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (3090)

## பன்றிக்கு வெடி...

களுடன் ஒருமோட்டார் சைக்கிளில் பயணமாகியுள்ளனர்.

இடைவெளியில் எதிர்பாராத விதமாக மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது இடுப்பில் எறிவெடி வைத்திருந்த குடும்பஸ்தர் கீழே வீழ்ந்ததில் வெடி வெடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழக்க நேரிட்டது.

இதில் அவரது சகோதரன் படுகாயங்களுடனும் மற்றைய நபர் சிறு காயங்களுக்கும் இலக்காகியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்தவர் முல்லைத்தீவு மாங்குள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# இலங்கை-இந். உடன்படிக்கை மீறப்படவில்லை - ஜனாதிபதி



இந்திய-இலங்கை உடன்படிக்கை மீறப்படவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பில் இதனைத் தெரிவித்த ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

1987-ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கையை மீறும் வகையில் நாம் செயற்படப் போவதில்லை.

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியா இலங்கையிடம் எதனையும் குறிப்பிடவில்லை.

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக ஆராயப்படும் என்றார்.

மேலும் சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் வழமையானது எனவும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

**காணி விற்பனைக்கு**
கோப்பாய் முருகன் கோயில் பிரதான வீதிக்கு சமீபமாக வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்புகளுக்கு : 0776758131
0776740836
[3100]

விமானத்துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கைநெறிகளை பயிற்சியுடன் குறுகிய காலத்தில் இலங்கையில் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்.
Male / Female
G.C.E. (O/L)
கருத்தரங்கு
22 ஆம், 23 ஆம் திகதிகளில்
9 to 12 pm
ACS
கோப்பாய்
தொ.பே: 0779123826/ 0773017147/ 077-0071835
(3082)

**பாடசாலைக்கல்வியை நிறைவுசெய்த மாணவர்களிற்கு மேற்படிப்பிற்கான புலமைப்பரிசில்**
ஐ.நா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட **MCS** தகவல்தொழில் நுட்ப வளாகம் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்த மாணவர்களிற்கு மேற்படிப்பிற்கான புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.
புலமைப்பரிசில்கள் பின்வரும் கற்கை நெறிகளிற்கு வழங்கப்படும்.
**BIT : கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப Degree**
**CIMA :Charted Institute of Management Accountant -UK**
**Engineering USA : Web/Networking/Software**
விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரக்கோவையை இல.34 சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு தபாலில் அல்லது பல்கலைக் கழகத்திற்கு அண்மையிலுள்ள எமது காரியலாயத்தில் 28/6/2013 க்கு முன்சமர்ப்பிக்கவும். A/L 2013 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். (சி-3722)

## மாகாண அதி...

வெளியிடும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

ஞானசார தேரர் கூறுவது போல் எமது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வரவேண்டும். அவர் சிந்திப்பது போல், எமது உடல் வாழ்வும் முடிவுக்கு வரவேண்டும் என்று கருதக் கூடும்.

தேர்தல் காலத்தில் இரத்தினபுரிக்கு வந்து எமது அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வருமாறு நான் தேரருக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

13வது திருத்தச் சட்டத்துடன் எப்படி வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவார்கள் என்பதை பார்ப்போம் என ஞானசார தேரர் கூறியிருந்தார்.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் கீழ்தான் வட மாகாண சபைத் தேர்தல் நடக்கும் என நான் கூறுகின்றேன்.

நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருப்பதை அப்படியே தொடர்ந்தால், தேரர் தனது காவி உடையை துறப்பாரா? தனது அமைப்பை கலைப்பாரா? மாகாண சபை அதிகாரங்கள் குறைக்கப்பட்டால், நான் அரசியல் இருந்து ஒதுங்கி விடுவேன்.

அதேபோல் தேரரும் தான் காவியை துறக்க போவதாக கூறவேண்டும்.

வார்த்தைகளில் பிதற்றினால் மாத்திரம் போதாது, காவிக்குள் ஒளிந்து கொண்டு அவர் பேசுகிறார். அவர் மிகவும் தவறான வார்த்தைகளை பயன்படுத்துகிறார். எனக்கும் அப்படி பேச முடியும். காவி உடையை மதித்து நாங்கள் அப்படி பேசுவதில்லை.

பொது பல சேனாவுக்கு நோர்வே நாட்டிடம் இருந்து அனுசரணைகள் கிடைத்து வருகின்றன.

நோர்வே தூதுவர் எப்போதும் பொதுபல சேனாவின் விகாரையிலேயே இருப்பார் எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை 13-வது திருத்தச் சட்டத்தில் கைவைக்க எவரையும் அனுமதிக்க மாட்டோம், அதனை பாதுகாப்பதற்காக எனது பதவியையும் துறப்பேன் என மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

**மணல் மண் வேண்டுமா ?**
* கட்டடவேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
* இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
* உங்கள் இடத்துக்கே கொண்டு வருகின்றோம்.
$4\frac{1}{2}$ டிரக்டர் 20,500/=
தொடர்பு:- ராம்
072 637 8546 (C-3721)

**கட்டிட நிர்மாணத்துறையில் தேர்ச்சி மிக்கவரா?**
கொழும்புப் பிரதேசங்களில் மேசன்/ கையுதவியாளர்/ பிளம்பர்/இலற்றீசன்/ பெயின்டர் உடனடியாகத் தேவை.
சம்பளம் 20,000/=, 45,000/= உணவு, தங்குமிடம்...
விரைவாக அழையுங்கள்
0775561883, 0778430179 (C-3725)

**Dutch, Deutsch, French**

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.
* French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* இறுதியாக இடம்பெற்ற நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தி பெற்ற தர்மகுலசிங்கம் தக்ஷலா (உரும்பிராய்) மற்றும் குணசிங்கம் நிஷா (உடுப்பிட்டி) ஆகியோரை எமது கல்வி நிறுவனம் சார்பில் வாழ்த்துகின்றோம்.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0213216928, 0774842464
(Gov. Reg.No: W/A 76795) (C-3719)

**வேலைவாய்ப்பு**
YMCA JAFFNA
யாழ் வை.எம்.சீ.ஏ பின்வரும் வேலைகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்கின்றது.
➢ அன்றாட நிகழ்வு ஒருங்கமைப்பாளர் (Liaision Officer)
➢ வரவேற்பாளர் (Receptionist)
➢ பராமரிப்பாளர் (Room Boy)
விண்ணப்பங்களை தொலைபேசி இலக்கத்துடன் பொதுச்செயலாளர், யாழ் வை.எம்.சீ, 109, கண்டி வீதி என்னும் முகவரிக்கு 30.06.2013 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.
- பொதுச்செயலாளர். (C-3720)

**கஜமுகன் டென்ரல் கிளினிக்**
நெல்லியடியில்.
DR. A. செந்தில்குமரன் அவர்களினால்

★ நிரந்தரமாக பல் கட்டுதல்.
★ நிரந்தரமாக கிளிப் போடுதல்.
★ மற்றும் சகல விதமான பல்/வாய் சிகிச்சைகள் இடம் பெறுகின்றன.
தொடர்பு :-
0212262888
ம.ம.வீதி, நெல்லியடி.
(இலங்கை வங்கிக்கு அருகில்)
நிர்வாகம் (C-37..)

**புதிய வேலை வாய்ப்புகள்**
**இதோ அரிய சந்தர்ப்பம் அழையுங்கள்!**
சம்பளம் 18,000/=, 25,000/=, 32,000/= வரையான கவர்ச்சிகரமான சம்பளத்துடன் நிரந்தர தொழில் உங்களுக்கு கல்வி அறிவு அவசியமில்லை. 'கொழும்பை' அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம்/கோயெல், ஆடைத்தொழிற்சாலை, PVC, கிளவுஸ், பொலீதீன் போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்/ லேபல்/ பொதியிடல்/தரம் பிரித்தல் பிரிவுக்கு ஆண்-பெண் 18-50 வயதினர் தேவை. உணவு தங்குமிடம் சகாய விலைகளில் (நண்பர்கள்/குழுக்கள்/ தம்பதியினர் ஒரேத் தொழிற்சாலைகளில்) தொடர்பு: 0775561883, 0778430179
103/1, Station Road, Vavuniya. (C-3725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.